# கலாநிதி சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர ஞாபகார்த்தப் பேருரை - 25

# கன்னங்கர காலத்திற்குப் பிந்திய கால, கல்விச் சீர்த்திருத்தங்கள் பற்றிய ஒரு மீள்நோக்கு

**திரு. ஆர். எஸ். மெதகம**

**13 ஒக்டோபர் 2014**

ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
**www.nie.lk**

**கலாநிதி சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர**
**ஞாபகார்த்தப் பேருரை - 25**

**கன்னங்கர காலத்திற்குப் பிந்திய கால,**
**கல்விச் சீர்த்திருத்தங்கள் பற்றிய**
**ஒரு மீள்நோக்கு**

**முதற்பதிப்பு :** ஒக்டோபர் 2014

© தேசிய கல்வி நிறுவகம்

**அச்சுப்பதிப்பு:** அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
www.nie.lk

# கன்னங்கர காலத்திற்குப் பிந்திய கால கல்விச் சீர்த்திருத்தங்கள் பற்றிய ஒரு மீள்நோக்கு

தூரநோக்குடைய தலைவரான கலாநிதி சீ. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கர அவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு எங்களது கடப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கின்ற இந்த 25ஆவது நினைவுக் கூட்டத்தில் பேருரையாற்ற அழைக்கப்பட்டது தொடர்பாக நான் பேருவகை அடைகின்றேன். நான் இன்றுள்ள நிலையை அடைவதற்குக் காரணமான அன்னாரினால் ஆரம்பிக்கப்பட்ட இலவசக் கல்வி மற்றும் புலமைப்பரிசில் திட்டம் ஆகியவற்றின் பலாபலனைப் பெற்றவன் என்ற அடிப்படையில் அன்னாருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவனாவேன். 1947ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய நான் 1948 ஆம் ஆண்டு எனது இடைநிலைக் கல்வியை ஆங்கில மொழி மூலத்தில் தொடருவதற்காக ஒரு மத்திய மகா வித்தியால யத்தில் சேர்ந்து கொண்டேன். அன்றிலிருந்து பல்கலைக்கழகத்தில் எனது முதலாவது பட்டத்தை பெறும் வரை இந்த இலவசக் கல்வியின் கனிகளைச் சுவைத்தேன். இக்கட்டத்தில் இலவசக் கல்வியின் தந்தையான அன்னாருக்கு எனது கடப்பாட்டைத் தெரிவிக்க வாய்ப் பளிக்கும் வகையில் என்னை இக்கூட்டத்தில் உரையாற்ற அழைப்பு விடுத்தமைக்காக தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகத்திற்கும் ஆராய்ச்சிப் பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியை யும் வந்தனங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நாட்டின் சராசரிக் குடும்பங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான பிள்ளைகளின் வாழ்வில் ஒளி பரப்ப வந்ததென அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், கல்வித்துறைசார் நிபுணர்கள் பலரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளவாறு கலாநிதி. சீ. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கர அவர்கள் இந்நாட்டின் கல்வித் துறைக்கு ஆற்றிய பங்களிப்பு பாரியது. இந்நாட்டின் கல்வி அமைச்சராகவும், தேசிய அரச பேரவையின் கல்விக்கான உயர் சபையின் தலைவராகவும், 1931ஆம் ஆண்டு தொடக்கம் 1947ஆம் ஆண்டு வரை அவர் பணியாற்றிய காலகட்டத்தில் அவர் செயற்படுத்திய மற்றும் ஆரம்பித்து வைத்த பல்வேறு திட்டங்கள் இந்நாட்டில் பாரிய சமூகப் புரட்சி ஏற்படக் காரணமாகின. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் சுதந்திரம் பெற்ற இலங்கைத் திருநாட்டை வளர்முக நாடுகளுக்கு மத்தியில் சமூக மாற்றத்திற்கான ஒரு முன்மாதிரியான நாடக மாற்றியமைக்கக் காரணமாகிய கல்வித்

துறையின் ஒரு தேசியத் திட்டமாகிய இலவசக் கல்வித்திட்டத்தை அறிமுகம் செய்த அவரது பெரு முயற்சி அடித்தளமிட்டது. உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனம் கூட முன்னோடியான கலாநிதி கன்னங்கரவின் தூர நோக்கை அங்கீகரித்து பின்வருமாறு சிலாகித்துக் கூறுகின்றது. “1930 ஆம் 1940ஆம் ஆண்டுகளில் இலங்கையின் கல்வி முறைமையின் அடிப்படைச் சட்டகத்தை திட்டமிட்ட கொள்கை திட்டமிடலாளர்கள் தமது காலத்திலும் மிகுந்த தூரநோக்குடன் செயற்பட்டு பரந்துபட்ட பல்வேறு பொருளாதார மற்றும் சமுக நற்பயன்களைப் பெறுவதற்கான அழுத்தம் மனிதவள முதலீட்டில் இருப்பதாக இனங்கண்டு செயற்பட்டுள்ளனர்.” (உலக வங்கி, 2005).

மத்திய மகா வித்தியாலயங்களைத் தாபித்தல், கல்வியின் ஊடக மொழியாக தேசிய மொழிகளை உபயோகித்தல், இலவசக் கல்வியை அறிமுகஞ் செய்தல், போன்ற கல்வியின் பல்வேறு பரிமாணங்கள் தொடர்பில் அவர் கொண்டிருந்த ஒட்டு மொத்த தூரநோக்கு பற்றி வெவ்வேறு மீளாய்வார்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளனர். எனினும் ஆசிரிய அபிவிருத்தி, சமாதான சகவாழ்விற்கான இசைவு, இரண்டாம் நிலைக்கல்வியில் பல்வகைமையை ஏற்படுத்தல், கலைத்திட்ட சீர்த்திருத்தங்கள் போன்றன தொடர்பான அவரது பங்களிப்புக்களும் அதேயளவு முக்கியமானவைகளாகும்.

## கல்வியின் தர மேம்பாடு - ஹெந்தலஸ்ஸ திட்டம்

கிராமப்புற கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகஞ் செய்வதுடன் கலைத்திட்ட சீர்திருத்தத்தின் முதலாவது அடி எடுத்து வைக்கப்பட்டது. இது ஹெந்தஸ்ஸ கிராமிய கல்வித் திட்டம் என அழைக்கப்பட்டது. சமுதாயத்தின் சமூக பொருளாதார வாழ்வுடன் கல்வியை தொடர்புபடுத்த கலாநிதி கன்னங்கரவின் கீழ்ச் செயற்பட்ட உயர் மட்டக் குழு நடவடிக்கை எடுத்தது. கண்டி நகருக்கு அருகாமையில் ஹெந்தஸ்ஸவிலுள்ள ஒரு கிராமியப் பாடசாலையின் 6,7,8ஆம் தரங்களின் மாணவர்கள் புத்தாக்கக் கலைத்திட்டமொன்றான இத்திட்டத்தில் ஒரு பரிசோதனை ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் வாழ்க்கைத் திறன்கள், சுகாதாரக் கல்வி, வாழ்விடச் சூழலினதும் அழகியலினதும் கல்வி ஆகிய நான்கு துறைகளினூடாக தமது கல்வி நடவடிக்கைகளிலீடுபட்டனர். வாழ்க்கைத் திறன்கள் என்ற பாடத்தின் மூலம் அவர்களுக்கு மரவேலை, களிமண்வேலை, செங்கல் உற்பத்தி,

பிரம்பு வேலை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மாணவர்கள் பாடசாலைத் தளபாடங்களைத் திருத்துவதிலும், பாடசாலை தோட்டத்தில் மரக்கறி பயிர்களைச் செய்கை பண்ணுவதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். சமுதாயத்தின் அங்கத்தவர்களான விவசாயிகளுடனும், தொழிலாளர்களுடனும் அவர்கள் ஊக்கத்துடன் செயற்பட்டனர். சுகாதாரக் கல்வி என்ற பாடத்தின் கீழ் நீர் நிலைகளைச் சுத்தப்படுத்தலிலும், பராமரிப்பதிலும், மலசலகூடங்களை நிருமாணிப்பதிலும், உபயோகிப்பதிலும், மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இன்று உலக சுகாதார தாபனம் போன்ற தாபனங்கள் தமது பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சமுதாயத்தின் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துமாறு விதப்புரைகளை முன்வைப்பதை இதற்கு ஒப்பானதாக நாம் எடுத்துக் காட்டலாம். தமது வாழ்விடச்சூழல் பற்றிய பாடத்தை கற்கையில் மாணவர்கள் தமது பிரதேசத்தின் புவியியல், அதன் சனத்தொகை, மக்களின் பொருளாதார நடவடிக்கைகளின் இயல்புகள் போன்றன பற்றி கற்றனர். அழகியல் கல்விப்பாடத்தின் கீழ் இலக்கியம், கலை, சங்கீதம். நடனம் ஆகிய பாடங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டன. அவர்கள் காலைவேளைகளில் மேற்படி பாடங்களைக் கற்பதில் ஈடுபட்ட அதேசமயம் மாலைவேளைகளில் வாசிப்பு, எழுத்து, பேச்சு, கணிதம் மற்றும் அவர்கள் காலைவேளைகளில் கற்ற கல்விசார் பாடங்களின் பிரயோக வேலைகள் பற்றிய அறிவைப் பெற்றனர்.

மேற்படி பரிசோதனை வெற்றியடைந்தமையால் இந்நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் பாடசாலைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு குறித்த பத்தாண்டின் இறுதியில் இந்நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தும் பாடசாலைகளின் எண்ணிக்கை 253 ஆயின. இப்பாடத்திட்டத்தை கற்ற மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் ஏனைய மாணவர்களிலும் பார்க்க அதிக திறமையைக் காட்டினர். எனினும் உயர்தள ஆங்கில பாடசாலைகள் மேற்படி திட்டத்தில் பங்கு பற்றாததன் காரணமாக அவர்களுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் கலாநிதி கன்னங்கர அவர்கள் இத்திட்டத்தை புதிதாக தாபிக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயங் களினூடாக பாடசாலைக் கலைத்திட்டத்தில் சேர்ப்பதில் வெற்றியடைந்தார்.

## 1939 ஆம் ஆண்டின் 31 இலக்க கல்விக் கட்டளைச் சட்டத்தின் சட்டவாக்கம்

நாட்டின் ஒழுக்க நெறிகளுக்குப் பொருந்தும் வகையிலான கல்விக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு வசதிவழங்கும் கல்விச் சட்டத்தை தயாரிப்பது கலாநிதி கன்னங்கர அவர்களின் கவனத்தை ஈர்த்த துறை களுள் ஒன்றாகும். இக்கருத்து விசேட குழு அறிக்கையில் பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது. அதாவது "கருத்திற் கொள்ளப்படுகின்ற தேசியத்தின் ஒழுக்க நெறிகளுக்கு இசைவாகும் கல்வித்திட்டமொன்று உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும்" அக்காலத்தில் வழக்கிலிருந்த கல்விச் சட்டம் 1920 ஆண்டின் கல்விக் கட்டளைச் சட்டமாகும். அதன்படி கல்விக் கொள்கை திட்டமிடல் தொடர்பான அதிகாரமுள்ள ஒரே அமைப்பு கல்விச் சபையாகும். அதன் அங்கத்தவர் களின் ஒரு பகுதியினர் உத்தியோத்தவர்களாகவும் ஏனையோர் ஆளுனரால் நியமிக்கப்படுகின்றவர்களாகவும் இருந்தனர். அவர்கள் அக்காலத்தின் எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலித்தனர். ஆகவே உதவி பெறும் பாடசாலைகளைக் கட்டுப்படுத்தும் இனப்பிரிவினரின் முன்னுரிமை களைப் பேணுவதையும் விருப்புக்களை நடைமுறைப்படுத்துவதையும் தீர்மானமாகக் கொண்டிருந்தனர். ஆகவே கலாநிதி கன்னங்கரவின் கட்டளைச் சட்டத்தை சட்டமாக்கும் கனவு நனவாக ஏழு ஆண்டுகள் எடுத்தன. அச்சமயத்திலும் கூட அவரது சில கோட்பாடுகள் தொடர்பாக முன்னுரிமை பெற்ற பிரிவினரின் விருப்பை பிரதிபலிக்கும் எதிர்கட்சி யினருக்காக நியாயமான தனது கொள்கைகளை விட்டுக் கொடுக்க நேரிட்டது. எவ்வாறாயினும் அதன் காரணமாக கல்வி நிருவாகம் தொடர்பான விசேட அதிகாரங்களைப் பெற்றது. அதன் முக்கியத்துவம் இலங்கையில் கல்வி என்ற கல்வி நூற்றாண்டு வெளியீட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "1939ஆம் ஆண்டின் கல்விக் கட்டளைச் சட்டத்தின் விசேட இயல்பாக அதனைத் தொடர்ந்து பெற்ற கல்வி சார்பான அடைவுகளைக் குறிப்பிடலாம்". கல்வி தொடர்பாக உயர் கல்விக் குழு எதிர்பார்த்த சக்திகளைப் பெற்றுக் கொள்ளவும், அவற்றைத் தக்க வைத்துக் கொள்ளவும் இதன் மூலம் பலம் கிடைத்தது. கல்வி தொடர்பாக அரசின் பொறுப்புக்கள் பற்றி தெளிவான முறையிலும், சட்டரீதியான முறையிலும் விவரிக்கப்படுகின்றது. (கல்வி மற்றும் கலாசார அமைச்சு - 1969) இன்று அச்சட்டத்திற்கு 75 வருடங்களாகிய போதிலும், அதன் பல்வேறு பிரிவுகள் பற்றி நோக்கும்போது அவை காலங்கடந்தவை எனத் தோன்றிய போதிலும் அதுவே இன்றும் கூட இந்நாட்டின் கல்வியின் முக்கிய சட்டமாக உள்ளது.

## கல்வி தொடர்பான விசேட குழுவின் அறிக்கை

“நாட்டில் ஏற்கனவே இருக்கும் கல்வியாளர்களின் உதவியுடன் தற்போதைய கல்வி முறைமையிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து மாறியுள்ள நிலைமைகளுக்கேற்ப அவற்றைச் சீர்செய்வதற்காகச் செய்ய வேண்டிய திருத்தங்கள் தொடர்பான விதப்புரைகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை ஆராய்தல் கல்விக்கான உயர்மட்டக் குழு தனது பணியாகக் கொள்ளவேண்டும்” என்று 1940 இல் அக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேற்படி குழுவின் அங்கத்தவர்களையும் வெவ்வேறு துறைசார்ந்த இந்நாட்டின் கல்வியாளர்களையும் உள்ளடக்கிய ஒரு விசேட குழுவொன்று இதற்காகச் உருவாக்கப்பட்டது. வினாக்கொத்துக்களையும் பொது மக்களின் கருத்துக்களைச் செவிமடுப்பதன் மூலமும் தற்போதைய கல்வி முறைமை தொடர்பாக தேவையான தகவல்களையும் தரவுகளையும் இக்குழு திரட்டியது. மூன்றாண்டுகளின் பின்னர் 1943ஆம் ஆண்டில் இக்குழு தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்தது.

இந்நாட்டுக் கல்விமுறைமையின் சகல அம்சங்கள் தொடர்பான ஒப்பீட்டாய்வொன்றும் அதனடிப்படையில் பொதுக்கல்வியின் சகல துறைகள் தொடர்பான விதப்புரைகளும் முன்வைக்கப்பட்ட முதற்றடவையாக இதனைக் குறிப்பிடலாம். அவ்வறிக்கையில் இற்றைக்கும் பொருந்தும் வகையிலான விடயங்கள் பல உள்ளடங்கியிருப்பது அதன் சிறப்பியல்பாகும். இதற்கு முந்திய பல சந்தர்ப்பங்களின்போது மேம்படுத்திக் காட்டிய அதன் பிரதான விதப்புரைகளான இலவச கல்வி வழங்கல், கற்பித்தல் மொழி மூலம் ஆகியவற்றுக்கு மேலதிகமாக கன்னங்கர யுகத்திற்கு பிற்பட்ட காலக் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான எனது உரைக்கு பெரிதும் பொருந்தும் வகையில் கலைத்திட்ட புத்தாக்கம், பாடசாலை முறைமையின் கட்டமைப்பு போன்ற ஏனைய விடயங்களை விசேடமாக குறிப்பிட்டுக்காட்ட நான் விழைகின்றேன்.

இலங்கையின் கல்வி தொடர்பான விசேட கமிட்டியின் அறிக்கையானது (கூட்டத்தொடர் அறிக்கை XXIV - 1943) கல்வி தொடர்பான பல்வேறு யோசனைகளைக் கொண்டிருந்தது. அவற்றைப் பின்வந்த கல்விச் சீர்திருத்தவாதிகள் செய்து முடிக்க முனைந்தனர். துரதிஷ்டவசமாக கலாநிதி கன்னங்கர அவர்கள் மேற்படி அறிக்கை பதிப்பித்த பின்

நீண்ட நாட்கள் குழுவின் தலைவராகச் பணியாற்றவில்லை. இற்றைக்கு எழுபதாண்டுகள் கடந்துள்ள போதிலும் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் **கன்னங்கர சிந்தனையை** முழுமையாக செயற்படுத்த இன்றுவரை முடியவில்லை.

கலாநிதி கன்னங்கர அவர்களினால் உருவாக்கப்பட்ட சில கருத்துக்கள் பற்றி அடுத்து விவரிக்கின்றேன். மேற்படி அறிக்கையில் எந்தளவு முன்னேற்றகரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என நான் எடுத்துக் காட்டவிழைகின்றேன். அதற்காக நான் விசேட செயற்குழுவின் அறிக்கையிலிருந்து பெயத்தெடுத்த சில பகுதிகளை முன்வைக்கின்றேன். (கூட்டத்தொடர் அறிக்கை XXIV,1943)

பொதுவான விடயங்கள் என்ற பகுதியில் ''ஒவ்வொரு பிரசையும் அவரவர் பங்கை ஆகக்கூடியளவில் தேசியத்திற்கு வழங்கக் கூடியவாறான முறைமையொன்றை உருவாக்க வழிப்படுத்தப்பட வேண்டும்''என்று குறிப்பிடப்படுகின்றது. இங்கு கருதப்படுகின்ற விடயங்கள் இரண்டாகும். முதலாவதாக, ஒருவரது சமூக அந்தஸ்தை அல்லது செல்வந்த நிலையைக் கவனத்திற் கொள்ளாது அவரால் அடையக் கூடிய உயர் மட்டத்திற்கு உள, உடல், ஒழுக்க ரீதியான அபிவிருத்தியை அடைய உதவி வழங்கப்பட வேண்டும். இரண்டாவதாக தான் பெற்ற கல்வியின் பயனை அல்லது ஆற்றலை அவரினால் முடியுமான அளவு தேசத்தின் நலனுக்கு பயன்படுத்த முடிதல், அவரது தீர்ப்புக்களைத் தேசத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்த முடிதல், தேசம் அவருக்கு வழங்கியுள்ள கடமைகளைப் புத்திசாதுரியமாக செய்து முடித்தல் ஆகியனவாகும். (கூட்டத்தொடர் அறிக்கை XXIV, P 9 - 1943)

கல்வியின் வகிபாகமாக தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவது பற்றி அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ''பல்லின கூறுகளைக் கொண்ட சனத்தொகையை ஒரு தேசியமாக்குவது எமது அடிப்படைத் தேவையாகும். பிறப்பில் வெவ்வேறு சாதிகளாகவும், இனங்களாகவும், மொழிபேசுபவர்களாகவும் மக்கள் இருத்தல் இந்நாட்டுக்கு புதிதல்ல என்பதையும் எமது நாட்டைப் போன்ற பல்லின சமூகத்தைக் கொண்ட ஒரு நாட்டில் தேசியத்தை உருவாக்குதல் முடியாததொன்றல்ல என்பதையும் இந்நாட்டின் வரலாறு எடுத்து காட்டுகின்றது. ஏற்கனவே எமது கலாசாரத்தில் ஒரு பாரிய ஒற்றுமை காணப்படுகின்றது. ஆகவே கல்வி மேம்பாட்டினால் நாம் பெறுகின்ற ஊக்குவிப்பின் பயனாக தேசிய

ஒருமைப்பாடு எனும் கொள்கை நம் மத்தியில் வளர்ந்து வருகின்றது. இலங்கையின் எதிர்காலக் கல்வியைத் திட்டமிடும்போது, தேசியத்துவம் என்ற கொள்கையையும், பொதுக் கூறை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.''

பல்வகைமை பலவீனத்தின் ஒரு காரணியாக அல்லாது ஒரு பலத்தின் காரணியாக அமைதல் வேண்டும். பொதுமையான ஒரு தொகையை உருவாக்குவதில் ஒவ்வொரு தனித்தனி சமுதாயமும் விசேடமான பங்களிப்பை நல்க வேணடும். வாய்ப்புக்கள் சமமானதாக இருக்குமாயின் மாத்திரமே அது வினைத்திறன் மிக்கதாக அமையும். ஆகவே சமனற்ற நிலைமைகளை இல்லாதொழித்தல் எமது பாரிய கடமையாகின்றது. அதன் பயனாக ஒவ்வொரு தனிநபரும் தனது ஆகக் கூடிய பங்களிப்பை நல்குவார்.

நாம் எதிர்பார்க்கும் மேற்படி தேசியத்துவம் தாங்குமியல்பையும் புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டதாகும். அவ்வாறின்றேல் எமது போன்ற இனப்பல்வகைமை யுடைய ஒரு இனத்தில் தேசிய ஒற்றுமைக்கு பதிலாக தேசிய பிரிவினைகளே காணப்படும். நாம் எமது மக்களிடம் எதிர்பார்க்கின்ற சகிப்புத்தன்மையானது எமது இனத்தினுள் மாத்திரமன்றி ஏனைய இனங்களுடனும் பேணப்படவேண்டியதொன்றாகும். எவ்வாறாயினும் மேற்படி சகிக்குமியல்பானது எமது பிரசைகளின் பண்பொன்றாகும். அதனால் தான் இத்தீவில் வாழ்ந்த பல்லின மக்களும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வந்தனர். ஆகவே எமது புதிய கல்விக் கட்டமைப்பின் கற்பித்தல் மேற்படி எமது பண்பான சகிக்குமியல்பையும், எல்லா இனத்தவர் மத்தியிலும் சமாதானத்தையும் ஏற்படுத்துமொன்றாக அமைதல் வேண்டும். (கூட்டத்தொடர் அறிக்கை XXIV P 10 - 1943)

சர்வதேச புரிந்துணர்வையும் தேசிய ஒற்றுமையையும் மேம்படுத்துவதில் கல்வியின் பங்களிப்பு பற்றிய சிந்தனை ஐக்கிய நாடுகள் சபை உருவாவதற்கு முன்னரேயே கலாநிதி கன்னங்கர போன்றோரின் சிந்தனையில் உருவாகியிருந்தது.

உள விருத்தி, கலாசாரம் மற்றும் வினைத்திறன் எனும் துறைகள் மேற்படி அறிக்கை இனங்கண்ட கல்வியின் இலக்குகள் தொடர்பான மூன்று பிரதான துறைகளாகும். மேற்படி உள விருத்தி என்ற தலைப்பின்

கீழ் உடல் வளர்ச்சி விருத்தி என்ற துறையும் உள்ளடங்கியிருந்தது. மேலும் தனிப்பட்ட மற்றும் பொது சுகாதாரத்திற்கு கலைத்திட்ட சீர்திருத்தத்தின் கீழ் இடமளிக்கப்பட்டிருந்தது. இது ஒரு பெருமை யளிக்கும் விடயமாகும்.

'சுகதேகியான உள்ளம் சுகதேகியான உடம்பினுள்ளேயே காணப்படும்' என அழுத்திக் கூறும் அறிக்கையானது பரீட்சைகள் மீது அதிக அக்கறை செலுத்துவதன் தீய விளைவுகளைப் பற்றி எடுத்துக் கூறுகின்றது. இது இன்றைக்கும் பொருந்தும் வகையான தலைப்பொன் றாகும். சமநிலையான உளவளர்ச்சியை நோக்காகக் கொண்டு கைவினைப் பயிற்சியின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. மேலும், சுய ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் சங்கீதம் மற்றும் சித்திரம் என்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது. அத்தோடு ஆளுமை வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் விதம் பற்றியும் இங்கு இனங்காட்டப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக பின்வரும் பந்தி பற்றி கவனம் செலுத்துவோம்.

''புதிய பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கக் கூடிய தீர்வுகளைக் காணும் ஒருவரே மிகப் பயனுள்ள பிரசையாவார். பிறப்பாற்றலே ஒருவனின் மேல்நிலைக்கு காரண மாகின்றது.'' (கூட்டத்தொடர் அறிக்கை XXIV, P12 - 1943)

இன்று நாம் மென்திறன்கள் மற்றும் வாழ்க்கைத்திறன்கள் பற்றி உரையாடுகின்றோம். எனினும் கலாநிதி கன்னங்கரஅவர்கள் இன்றைய தீர்க்கதரிசிகளுக்கு பல காலத்திற்கு முன்னரேயே இது பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

தரம் ஐந்திலிருந்தே பாடசாலை முறைமையை இடைநிலை, சிரேட்ட மற்றும் பிரயோக பாடசாலை என்ற வாறு வகைப்படுத்தல் பற்றிய அவரது பிரேரணையானது பல்வேறு கருத்து மோதல்களை உருவாக்கு வதற்குக் காரணமாகிய ஒரு முன்மொழிவாகும். ஆரம்பக் கல்வியானது 6 வருடங்களாக விருந்ததனால் ஒரு பிள்ளை தனது ஆரம்பக் கல்வியை முடிக்கும் போது அவன் 12 அல்லது 13 வயதை அடைந்து விடுகின்றான். குறித்த ஒரு பிள்ளை அவனது பாடநெறியை மாற்றத் தேவையான அளவு விசேட திறன்களைக் கொண்டவனாக இருப்பானாயின், அவனது

பாடநெறியை மாற்றும் அதிகாரம் தலைமை ஆசிரியர்களுக்கு தரப்பட்டிருந்தது. தரம் 6 தொடக்கம் 8 வரையான கலைத்திட்டம் ஒரேமாதிரியானதாக இருந்த போதிலும் கற்பிக்கும் முறையியல் அடிப்படையில் மாற்றங்கள் காணப்பட்டன. மேற்படி அறிக்கையின்படி இடைநிலை பாடசாலைக்கும் சிரேட்ட பாடசாலைக்குமிடையிலான வேறுபாடு ஆற்றல் வகையின் அடிப்படையிலன்றி ஆற்றல் மட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வில்லை (கூட்டத்தொடர் அறிக்கை XXIV P 45 - 1943). மேலும் தரம் 8 இல் நடாத்தப்பட்ட பரீட்சையின்போது சிறந்த அடைவைக் காட்டிய மாணவர்கள் திரும்பவும் இடை நிலைப் பாடசாலையில் அல்லது சிரேட்ட பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். ஆகவே மேற்படி உத்தேச திட்டம் எதிர்பார்த்ததிலும் பார்க்க அதிக நெகிழிமையைக் கொண்டதாக இருந்தது. பிற்பட்ட காலத்தில் கல்வியின் பாரிய பிரச்சினையாக உருவான கல்விக்கும் தொழில்வாய்ப்பிற்கும் இடையிலான பொருத்தப் பாடின்மை மேற்படி பிரேரணைகள் தேவையான திருத்தங்களுடனாவது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் உருவாகாது இருந்திருக்கும்.

பரீட்சைகள் தொடர்பாக கருதும்போது தேசிய பரீட்சை முறைமையின் சாதக பாதகம் பற்றிச் செயற்குழு கவனத்திற் கொண்டது. ஆகவே அடைவுப் பரீட்சைகளிலும் பார்க்க பாடசாலை மட்ட பரீட்சைகள் தொடர்பாகவும், தகைமைப் பரீட்சைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தியது. அக்காலகட்டத்தில் பெரும்பாலான பாடசாலைகள் இலண்டன் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தி வந்தன. ஆகவே பாடத்திட்டம் இலண்டன் நிலைமைகளுக்குப் பொருந்தும் வகையிலேயே தயார்ப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக மாணவர்கள் பொருத்தமற்ற ஒரு பாடத்திட்டத்தைக் கற்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருந்தனர். அதனை அறிக்கை பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றது. “இடைநிலைப் பாடசாலையானது தனது கலைத்திட்டத்தைப் பரீட்சைகள் ஆக்கிரமிப்பதை தவிர்க்க வேண்டும். எனினும் பரீட்சையானது மாணவனது எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒன்றாகையால் அவை உள்நாட்டின் தேவைகளையும் நிலைமைகளையும் அடிப்படையாகக் கொண்டதாக விருத்தல் வேண்டும்.” (கூட்டத்தொடர் அறிக்கை XXIV, P 47 - 1943) பரீட்சைகளில் சித்தியடைவதற்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் மிகையாக வழங்கப்படுகின்ற வீட்டு வேலைகள் தொடர்பாகவும் அவ்வறிக்கை தனது கவனத்தைச் செலுத்தியது. அதிமதிகமாக

வழங்கப்படுகின்ற வீட்டு வேலைகள் மாணவரை உடல்ரீதியாக முடக்கி யாதொன்றையும் ஆரம்பிக்கும் திறனற்றவர்களாக ஆக்குகின்றன. மேலும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விளையாட்டுக்களஂ கலந்துரை யாடல்கள் மற்றும் வாசித்தல் ஆகியவற்றினூடாக மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பெருமளவான கல்வியறிவைக் கிடைக்காமல் செய்து விடுகின்றன. ரியூசன் எனப்படும் தனிப்பட்ட போதனையை பற்றி அறிக்கை இவ்வாறு கருத்துக் கூறுகிறது. ''தனிப்பட்ட போதனையின் மூலம் பாடசாலையில் தரப்படுகின்ற வீட்டு வேலைகளை வீட்டில் போதிக்கும் பெற்றோரின் பழக்கத்தை நாம் கடுமையாக மறுதலிக்கின்றோம். அது மாணவரின் ஆரம்பிக்கும் ஆற்றலையும் அசல் தன்மையையும் இல்லாமற் செய்வதனால் இறுதியில் அது அதன் நோக்கத்தை இழந்து விடுகின்றது.'' (கூட்டத்தொடர் அறிக்கை XXIV, P 48 - 1943)

பாடசாலைகளிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைகளில் ஈடுபடுவது தொடர்பாகவும் செயற்குழு வாதிட்டது. இப்பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக கல்வி ஆராய்ச்சிக்கான சபை ஒன்று தாபிக்கப்பட வேண்டுமென செயற்குழு பரிந்துரைத்தது. ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளைப் பரப்புவதற்காக கல்வி விடயங்கள் தொடர்பான தகவல் பணியகமொன்றைத் தாபித்தலும் ஆராய்ச்சிகளை நடத்தத் தேவையான நிதி வழங்கலும் அவசியமாகும். மேலும் அண்டை நாடுகளில் நடாத்தப்படும் கல்வி ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்ளலும், ஆராய்ச்சியாளர்களின் பெறுபேறுகளைக் காலத்திற்கு காலம் வெளியிடுதலும் அவசியமாகும்.

கல்வியின் உள்ளடக்கம் தொடர்பான பல்வேறு பயன் மிக்கதும் பெறுமதி வாய்ந்ததுமான விடயங்களை அறிக்கை கொண்டிருந்தது. சுகாதாரக் கல்வியை கல்வியின் ஒரு அடிப்படையாக விவரித்த அறிக்கை அதன் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகின்றது. குடியுரிமை, புவியியல், வரலாறு, இயற்கை விஞ்ஞானங்கள், இயற்கை கல்வி, கணிதம், மொழியும் இலக்கியமும், சித்திரமும் சங்கீதமும், கைவினைப்பயிற்சி ஆகியன அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய சில பாடத்துறைகளாகும். பாடசாலையும் சமூகமும், பெண்கள் கல்வி, கலைத்திட்டத்தின் பல்வகைமை, ஆசிரியர், வீடும் பாடசாலையும், கற்றல் கற்பித்தல் முறையியல் போன்ற பொதுவான பல துறைகளையும் அது உள்ளடக்கியிருந்தது. தற்கால சூழலுக்குப் பெரிதும் பொருந்தும்

வகையிலான கல்வி தொடர்பான பல்வேறு கருத்துக்கள் அறிவுப் பொக்கிஷங்களாக மேற்படி விசேட செயற்குழுவின் அறிக்கையில் உள்ளடங்கியிருந்தது. துரதிஷ்டவசமாக கலாநிதி கன்னங்கர அவர்கள் மேற்படி பிரேரணைகளை அமுல்படுத்தும் வகையில் தொடர்ந்தும் பதவியில் இருக்கவில்லை. அவரைத் தொடர்ந்து அப்பதவிக்கு வந்தவர்கள், தடைகளை ஊடறுத்துச் செல்லும் தைரியமிக்க போராளியான அவரின் தரத்திற்கு ஏற்றவர்களாகவோ அவரைப் போன்ற அந்தஸ்துள்ளவர்களாகவோ இருக்கவில்லை. இந்நாட்டின் சகல ஆசிரியர் பயிற்சிப் பாட நெறிகளிலும் இவ்வறிக்கை ஒரு அத்தியாவசிய பாட நூலாக்கப்பட வேண்டுமென இதன் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு நான் விதந்துரைக்க விரும்புகின்றேன்.

1950ஆம் பத்தாண்டுகளில் கல்வி சார் வழங்கல்களில் பாரிய மாற்றம் எண்ணிக்கையளவில் நடைபெற்ற போதிலும் முன்னெடுக்கப்பட்ட ஒரேயொரு சீர்திருத்த செயற்பாடாகக் குறிப்பிடக்கூடியது கல்வியின் ஊடக மொழியாகத் தேசியமொழிகளை ஆக்கியது மாத்திரமாகும். இத்தகைய ஊடக மொழி மாற்றத்தை கலநிதி கன்னங்கர அவர்கள் எதர்பார்த்திருந்த போதிலும் அதன் காரணமாக சர்வதேச மொழி என்ற ரீதியில் ஆங்கில மொழியையோ ஆங்கில மொழியைக் கற்பிப்பதையோ குறைத்து மதிப்பிடவில்லை. எனினும் தேசிய மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட முறையானது ஆங்கில மொழிக் கற்றலில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியன் விளைவாக அது தேசிய அபிவிருத்தி சீரழியக் காரணமாகியது.

## கன்னங்கர காலத்தின் பின்னரான கல்விச் சீர்திருத்தங்கள்

1960 - 1961 ஆண்டுகளில் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றல்

1960ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய கலாசாலைகள் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின்படி பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் 1960 ஆம் பத்தாண்டுகளில் நடைபெற்ற மிக முக்கிய நிகழ்வாகும். இச்சட்டத்தின்படி சகல உதவிபெறும் பாடசாலைகளும் கல்விப்பணிப்பாளரின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. எனினும் தரம் 1 அல்லது தரம் 2 பாடசாலையின் உரிமையாளர் ஒருவர் விரும்புவாராயின் அவர் தனது பாடசாலையைக் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையாக

நடாத்த முடிந்தது. இதன்படி 48, 1ஆம் 2ஆம் தரப் பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகள் யாவும் அரசாங்கப் பாடசாலைகளாக மாறின. மேற்படி பாடசாலைகளின் தங்குதடையற்ற செயற்பாட்டை உறுதி செய்வதற்காக உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் தொடர்பான 1961 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க மேலதிக ஏற்பாடுகள் சட்டத்தின்படி மேற்படி பாடசாலைகளின் சொத்துக்கள் அரச உடமையாக்கப்பட்டன. மேற்படி சட்டமானது 5 தொடக்கம் 14 வயதுக்கிடையிலான பிள்ளைகளுக்காக புதிதாகப் பாடசாலைகளை நிறுவுவதைத் தடை செய்தது. இவ்வாறு இந்நாட்டில் தேசிய பாடசாலை முறைமையொன்றின் அபிவிருத்திக்கான அடித்தளம் இடப்பட்டது.

கலாநிதி கன்னங்கரஅவர்கள் ஓர் எதிர்க்கட்சி அங்கத்தவராகவிருந்த போதிலும் இப்பிரேரணையை முழுமையாக ஆதரித்தார். விசேட செயற்குழுவானது அரச உதவி பெறும் சமய பாடசாலைகள் தொடர்ந்து இருப்பதை ஆதரித்தது. வசதி படைத்த மக்களின் செல்வாக்கு காரணமாக அவருக்கு இவ்வாறு ஆதரிக்க நேரிட்டதாயினும் கலாநிதி கன்னங்கர அவர்கள் தனிப்பட்ட ரீதியில் சமயம் சார்ந்த பாடசாலைகளை விரும்பவில்லை.

ஆகவே அவர் தனது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"சமயப்பிரிவினர் கல்வியைக் கட்டுப்படுத்துவது தொடர்பான என் எதிர்ப்பை இங்கு குறிப்பிடாவிட்டால் நான் எனது கடமையைச் சரியாகச் செய்தவனாக மாட்டேன் எனக் கருதுகின்றேன். 63,64,65 மற்றும் 67 ஆம் பக்கங்களில் தரப்பட்ட பரிந்துரைகள் பற்றியும் தற்கால சமயம் சார்ந்த பாடசாலை முறைமை நிலவுவதற்காக முன்வைக்கப்படுகின்ற தர்க்கங்கள் பற்றியும், இங்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். அவை 345, 347 ஆம் பந்திகளில் பொழிப்பாகத் தரப்பட்டுள்ளன. தமது சமயப் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் பரீட்சையில் அதிக திறமையைக் காட்டியோரிலும் கூடுதல் தகைமை கொண்டவர்களாகக் கருதப்பட்டு சமய அடிப்படையிலான பாடசாலைகளின் முகாமையாளர்களினால் ஆசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற 163 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயம் தொடர்பாக எனது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆங்கிலக் கல்விச் சபையின் நடுநிலையான அவதானிப்பாளரான பாடசாலை பரீட்சகர்

திரு ஜே.ஜே.ஜே. பிரிஜ் என்பார் 1911 ஆம் ஆண்டிலேயே சமய சார்பான பாடசாலைகளினால் கட்டுப்படுத்தப்படுகின்ற பாடசாலை முறைமையிலுள்ள குறைபாடுகளை எடுத்தியம்பினார். மேற்படி திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில பயன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பான சந்தேகங்கள் இல்லாத போதிலும் வெவ்வேறு சமயக்குழுக்கள் போற்றியதும் அவைகளிடையே நிலவுகின்றதுமான விரோத மனப்பான்மையையும், கசப்புணர்வையும் ஒரு பக்க முன்னேற்றத்தை ஏற்படுத்திய மேற்படி சமய சார்பான பாடசாலை முறைமையினால் இல்லாமற் செய்வது இயலாத காரியமாகும். பிரித்தானிய தொடர்பின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை காணப்படுகின்ற, முன்னர் குறிப்பிட்ட சமய சார்பான பாடசாலை முறைமையினால் மோசமாக்கப்பட்ட மிகுந்த கவலைக்கிடமானதும், குழப்பமானதுமான நிலை சமவாய்ப்பின்மை என்ற நிலையாகும். சார்பளவில் குறைவான வளங்களும, சிறப்பாக ஒழுங்கமையும் திறனும், ஒற்றுமையும் அற்ற சமயக்குழுக்கள் நீண்ட காலமாகவே அநீதியையும், விரக்தியையும் அனுபவித்து வந்தன. ………… ஆகவே எதிர்காலத்திற்கான எந்த ஒரு கல்வி முறைமையும் பூரண சுதந்திரமானதும், பொதுமக்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஒன்றாகவும் இருக்க வேண்டும் என நான் நம்புகின்றேன்". (கூட்டத்தொடர் அறிக்கை XXIV, P138,139 - 1943)

கலாநிதி கன்னங்கர நல்லொழுக்க வளர்ச்சிக்கு சமயப் பின்னணி அவசியமானதாயின் சமயம் சார்ந்த பாடசாலைகளில் கற்கின்ற குறித்த சமயத்தைச் சேராத மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சி பற்றி கேள்வி எழுகின்றதென எடுத்துக் காட்டினார். சமயம் சார்ந்த பாடசாலையானது குறித்த பாடசாலையின் முகாமையாளரின் சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு மாத்திரமாயின் இந்நிலை காரணமாக எதிர்கால சில பிரசைகள் சமய அடிப்படையில் பிரித்து ஒதுக்கப்படுகின்றனர் என விளக்கிய அவர் சமய அடிப்படையில் மக்கள் பிரித்தெதுக்கப் படுகின்ற பரிதாப நிலையை விரிவாக விளக்கினார். அரசாங்க பாடசாலைகளிலும் சமயக் கல்வியைக் கற்பிக்க முடியுமெனவும் ஆகவே அரசாங்க பாடசாலைகள் கடவுள் இல்லாததும் ஆன்மா இல்லாததும் அல்ல என்றும் வாதிட்டார். சமயம் சார்ந்த கல்வியானது தொழில்களின் போதும் குடிமக்களைப் பிரித்தொதுக்குகின்றது என எடுத்துக் காட்டிய அவர் முகாமையாளர்கள் ஆசிரியர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் அவர்களை வேலைநீக்கம் செய்வதையும் கண்டித்தார்.

ஆசிரியர் ஒருவர் தனது சமயத்தை மாற்றிக் கொள்வாராயின் அதன் காரணமாக அல்லது முகாமையாளரது சமயத்தைச் சேராத ஒருவரை மணமுடிப்பாராயின் அதன் காரணமாக அவரது சேவை நீடிப்பு இடைநிறுத்தப்பட்டது.

பயிற்சி பெறும் ஆசிரியர்கள் வேறு சமயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுடன் பழகுவதற்கு வாய்ப்பில்லாத படியால், அவர்கள் தமது சமயப் பிரிவைச்சேர்ந்த பயிற்சிக் கலாசாலைகளுக்கே பயிற்சிக்காக அனுப்பப் பட்டனர். ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய அத்தியாவசியப் பண்பு களான சகிப்புத்தன்மை, சகமனிதர்களின் எண்ணங்களுக்கு மதிப் பளித்தல் போன்ற பண்புகளைப் பற்றி எக்கணத்திலும் அவர்கள் மனதிற் கொள்ளவில்லை.

ஒரே விதமான தேசிய கல்வி முறைமையொன்றை அறிமுகஞ் செய்யும் தளத்தை தயார்செய்யும் செயலாகவும் சமய சார்பான பாடசாலைகளில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளையும், அநீதியான நடத்தைகளையும் இல்லாதொழிக்கும் படிமுறையாகவும் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும் நடைமுறை அமைந்தது.

## 1961 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழு

இலங்கைக்கான ஒரே விதமானதும் ஒன்றுபட்டதுமான தேசிய கல்வி முறைமையொன்றைத் தாபிப்பதற்காக மொத்த கல்வி முறையையும் ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை அறிக்கை செய்வதற்காக பேராசிரியர் ஜே.ஈ.ஜயசூரிய அவர்களின் தலைமையின் கீழ் தேசிய கல்வி ஆணைக்குழுவொன்றை 1961 ஆம் ஆண்டு அரசாங்கம் நியமித்தது. மேற்படி ஆணைக்குழுவானது தனது இடைக்கால அறிக்கையை 1961 ஆம் ஆண்டும், இறுதி அறிக்கையை 1962 ஆம் ஆண்டும் கூட்டத் தொடர் அறிக்கைகளாக வெளியிட்டது (XVII- 1943). பொதுக்கல்வியின் சகல துறைகளும் அவ்விதப்புரைகளில் அடங்கும். அவ்வாறான சில பிரதான பிரிவுகள் வருமாறு,

- கட்டாய பாடசாலைக் காலம் - 6 வயது முதல் 14 வயது வரை
- கற்பித்தல் மொழி மூலம் - இலங்கை பிரசைகளின் பிள்ளை களுக்கான மொழி மூலம் சிங்களம் அல்லது தமிழ்
- தரம் 8 முதல் விருப்புக்குரிய மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்படும்

- பாடசாலை முறைமை - தரம் 1 - 8 வரை கனிட்ட பாடசாலை க.பொ.த (சா.தரம்) க.பொ.த (உ.தரம்) ஆகியவற்றுக்கான சிரேட்ட பாடசாலை 4 வகைகளாகும். அவையாவன விவசாயம், பொறியியலும் தொழினுட்பமும், விஞ்ஞானமும் கலையும், வணிகமும் மானிடவியலும்.
- பாடசாலை வலயமாக்கல் - ஒரு வலயத்திலுள்ள மாணவர்கள் பிரதேசத்தில் மிக அருகிலுள்ள ஆரம்ப பாடசாலையில் சேர்ந்து கொள்வர். அவர்கள் தமது உளச்சார்பின் அடிப்படையில் ஒரு சிரேட்ட பாடசாலையில் சேர்ந்து கொள்வர்
- கல்வியின் உள்ளடக்கம் - ஆரம்ப பாடசாலைகளுக்கான ஒரு பொதுக் கலைத்திட்டமும் சிரேட்ட பாடசாலைகளுக்கான வெவ்வேறு வகையான கலைத்திட்டங்களும்.
- வேலை அனுபவம் - வேலைத்தளமொன்றுடன் இணைந்த அனுபவம்
- கற்பித்தல் (ஆசிரியத்) தொழில் - ஆட்சேர்த்தலும் பயிற்சி வழங்கலும்
- மாணவர் நலன்புரி செயற்பாடுகள் - சுகாதார வசதிகள், நன்பகல் உணவு
- புலமைப்பரிசில் பரீட்சை - தரம் 5 இலிருந்து தரம் 8 இற்கு மாற்றுதல்
- பாடசாலை உளவள சேவை
- கல்வி நிருவாகம்
- பாடசாலை சமுதாய தொடர்புகள்

அரசாங்கம், மேற்படி பெரும்பாலான விதப்புரைகளைக் கூட்டிணைத்து தேசிய கல்வி முறைமைக்கான உரிமைத்துவ ஆலோசனைகளாக 1964 ஆம் ஆண்டு ஒரு வெள்ளையறிக்கையை வெளியிட்டு பொது மக்களின் அபிப்பிராயம் கோரியது. எவ்வாறாயினும் அவ்வாண்டு பொதுத் தேர்தல் நடைபெற்று எதிர்க்கட்சி பதவியேற்றது. **அத்துடன் வெள்ளை யறிக்கை முன்மொழிவுகளும் முடிவுக்கு வந்தன.**

## 1966 ஆம் ஆண்டின் பொது மற்றும் தொழினுட்ப கல்வி சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகள்

தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையினதும், தொழினுட்பக் கல்விக்கான ஆணைக்குழுவின் அறிக்கையினதும் முன்மொழிவுகளைக்

கருத்திற் கொண்ட புதிய அரசாங்கம் 1963 ஆம் ஆண்டு ஒரு வெள்ளையறிக்கைத் தயாரித்தது. அதில் தரம் 8 வரை, ஒரு பொதுவான ஆரம்பப் பாடசாலை இருக்க வேண்டுமெனவும் அக்கட்டத்தில் நடாத்தப்படுகின்ற ஒரு பொதுத் தேர்வுப்பரீட்சையின் மூலம் மாணவர்கள் அவ்விடத்திற்குரிய பிரயோக பாடசாலைகளுக்கும், கனிட்ட தொழினுட்ப பாடசாலைகளுக்கும், சிரேட்ட பாடசாலைகளுக்கும் தெரிவு செய்யப்படுவர் எனவும் விதந்துரைக்கப்பட்டிருந்தது. சிரேட்ட பாடசாலை யில் சேர்ந்து கொள்ளும் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்பை பெறுவர்.

தரம் 8 பரீட்சையில் தகைமை பெறும் மாணவர்கள் மாத்திரமே தொடர்ந்து  கல்வி கற்பதற்கும் உயர் கல்வியைத் தொடருவதற்கும் வாய்ப்பு பெறுவதாக அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சில பகுதியினர் குறிப்பிட்டிருந்தனர் இதனால் அரசாங்கம் தனது வெள்ளையறிக்கையைத் திருப்பி பெறுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டது. அதன்படி அரசாங்கம் 1967 ஆண்டு அதற்கான திருத்தங்களை முன்வைத்தது. அதன்படி தெரிவுப்பரீட்சை தரம் 7 இல் நடாத்தப்பட்டது. அதில் சித்தி பெறும் மாணவர்கள் தமது திறமை அடிப்படையில் சிரேட்ட பாடசாலைகளுக்கும் தொழினுட்ப கல்லூரிகளுக்கும் நுண்கலை கல்லூரிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேற்படி குழப்பமான சூழலுக்கு மத்தியிலும் உருவான விருப்பிற் குரியதுமான செயற்பாடு யாதெனில், கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக ஏற்பட்ட செயற்பாடுகளாகும். சர்வதேச போக்குகளுக்கேற்ப கலைத்திட்டத்தை ஆராய்ந்த ஒரு உத்தியோகத்தர் குழுவினர் படிப்படியாக கலைத்திட்டத்தில் புத்தாக்கங்களைப் புகுத்தினர். விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியர்களை முதலில் பயிற்றுவித்த அவர்கள் படிப்படியாக ஏனைய பாட ஆசிரியர்களையும் பயிற்றுவித்தனர். இதற்காகப் பாடவிதான அபிவிருத்தி நிலையம் என்ற நிலையம் கல்வி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது. இந்நிலையம் கல்வியின் தரவிருத்திக்காக கணிசமான பங்களிப்பை தொடர்ந்து வழங்கியது.

விரிவடைந்து வந்த வேலைப்பழுவிற்கு ஒத்ததாக கல்வி நிருவாக தாபனங்களும் குறிப்பிட்டளவில் மாற்றமடைந்தன. வெளிக்கள உத்தியோகத்தர்களின் துணையுடன் சகல பாடசாலைகளையும் நிருவகிப்பதன் பொறுப்பு 1960 ஆம் ஆண்டு வரை கல்வித்திணைக்

களத்தின் பொறுப்பாகவிருந்தது. 1961 ஆம் ஆண்டில் மாகாண மட்டத்தில் உதவிப் கல்விப் பணிப்பாளர்களின் தலைமையின் கீழ் பிராந்திய கல்விக் காரியாலயங்கள் தாபிக்கப்பட்டன. மேலும் மாவட்ட மட்டத்தில் கல்விப் பணிப்பாளர்களின் தலைமையின் கீழ் துணைக்காரியாலயங்கள் நிறுவப்பட்டன. 1966 ஆம் ஆண்டில் மத்திய கல்வித்திணைக்களங்கள் கல்வி அமைச்சுடன் ஒன்றிணைக்கப்பட்டன. அமைச்சின் செயலாளர் கல்விப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். பிராந்திய கல்விக் காரியாலயங்கள் திணைக்களங்களாக தரமுயர்த்தப்பட்டன. உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கல்விப்பணிப்பாளர்களாக பதவி உயர்த்தப்பட்டு திணைக்களத் தலைவர்களின் அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. பிரதான கல்விப் பணிப்பாளர்கள் அதே நிலையில் நீடித்தனர். மேலும் பாடசாலைப் பரீட்சகர்கள் வட்டார கல்வி அதிகாரிகளாக மீள பதவி மாற்றம் செய்யப்பட்டனர்.

## 1972 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்கள்

1970 ஆம் ஆண்டின் ஆட்சி மாற்றத்துடன் புதிதாக சீர்திருத்த பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அச்சமயத்தில் இருந்த பிரதான பிரச்சினையான இளைஞர் மத்தியில் தொழில் வாய்ப்பின்மைக்கான பிரதான காரணமாக கல்வி முறைமையின் குறைபாடுகள் இனங்காட்டப் பட்டன. அரசின் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தில் இது முக்கியமாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. பேராசியர் டட்லி சியர்சின் தலைமையிலான ILO வின் அறிஞர்கள் குழு இப்பிரச்சினையைப் பற்றி ஆராய்ந்தது. கல்விக்கும் தொழிலுக்கும் இடையிலான பொருத்தப்பாடின்மையே இதற்கான முக்கிய காரணமாக இனங்காணப்பட்டது.

1971 ஆம் ஆண்டின் இளைஞர்களின் கிளர்ச்சி எழுந்த இச்சூழ்நிலை அதிகாரத்திலிருந்த வர்களைக் கல்வி சீர்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க விரைவுபடுத்தியது. மேற்படி கிளர்ச்சியானது ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பித்தது அதனை இரண்டு மாதங்களில் பூரணமாக அடக்க முடிந்தது. அதனைத் தொடர்ந்து கல்வி அதிகாரிகள் சீர்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். அதனை அமுல்படுத்தல் 1972 ஜனவரியில் ஆரம்பமாகியது. பொதுமக்களின் அபிப்பிராயம் கோராமலும் வெள்ளையறிக்கையொன்றைச் சமர்ப்பிக்காமலும், மிக விரைவாக பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

## 1972 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் பிரதான அம்சங்கள்

**1. பாடசாலை முறைமையில் ஏற்படுத்திய கட்டமைப்பு மாற்றங்கள்:** புதிய பாடசாலைக் கட்டமைப்பில் ஐந்தாண்டு ஆரம்ப கல்வியும், நான்காண்டு கனிட்ட இடைநிலைக் கல்வியும், இரண்டாண்டு சிரேட்ட இடைநிலைக்கல்வியும் காணப்பட்டது. முதலாம் ஆண்டுக்கான புகுமுக வயது 5 இலிருந்து 6 ஆக உயர்த்தப்பட்டது. எனினும் ஆரம்ப கல்வியை முடிக்கும் பிள்ளையின் வயது மாறாது இருந்தது. அதாவது 11 ஆக இருந்தது. கனிட்ட இடைநிலை பருவத்தின் பின்னர் மாணவர்கள் சாதாரண கல்வி தொடர்பான தேசிய சான்றிதழ் (NCGE) என்ற பரீட்சைக்குத் தோற்றுவர். அதில் சித்தியடையும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து தேசிய உயர் கல்விச் சான்றிதழ் பரீட்சைக்குத் (HNCE) தோற்றுவர். இப்பரீட்சைப் பெறுபேறின் அடிப்படையில் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். எனினும் அம் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்பதாக திசைகோட்படுத்தப்படுவர்.

**2. கலைத்திட்ட சீர்திருத்தங்கள்** - மாணவர்களின் வயது மட்டத்திற்கு ஏற்றவாறு கலைத்திட்டத்தை சீரமைத்தல்.

ஆரம்ப கலைத்திட்டத்தில் சமயம், ஊடகமொழி (சிங்களம் அல்லது தமிழ்) இரண்டாம்மொழி, (தரம் 3 இலிருந்து) கணிதம், உடலியல் மற்றும் அழகியல் செயற்பாடுகள், ஆக்கச் செயற்பாடுகள், மற்றும் சுற்றாடல் செயற்பாடுகள், ஆகியன அடங்கியிருந்தன. எனினும் ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையான - செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் முறையை - ஆசிரியர்கள் கற்பித்தல் முறையியலாக உபயோகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர்.

கனிட்ட இடைநிலை பாடத்திட்டத்தில் சமயம், இரண்டாம்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, அழகியல், சுகாதாரமும் உடற்கல்வியும், தொழில் முன்னிலைப் பாடம் 1,11 ஆகியன அடங்கி யிருந்தன.

க.பொ.த (சா.தர) கலைத்திட்டத்தில் கற்பித்த பௌதிகவியல், இரசாயன வியல், உயிரியல் ஆகிய பாடங்களுக்கு பதிலாக NCGE பரீட்சையில் ஒன்றிணைந்த பாடமாக விஞ்ஞான பாடமும் வரலாறு, புவியியல், குடியியல் ஆகிய பாடங்களுக்கு பதிலாக சமூகக் கல்விப் பாடமும் தொழினுட்ப பாடங்களுக்கு பதிலாக தொழில் முன்னிலைப் பாடங்களும் அறிமுகஞ் செய்யப்பட்டன. தொழில் முன்னிலைப்பாடத்தில் காணப்பட்ட புதிய விடயம் யாதெனில் குறித்த பிரதேசத்திலுள்ள தொழிலை மையமாகக் கொண்டு அப்பாடம் கற்பிக்கப்பட்டமையும் மாணவர்கள் தொழில் பின்னணி பற்றி அறிந்து கொண்டமையுமாகும். அதற்கு மேலதிகமாக மாணவர்கள் நாட்டின் வளங்கள் பற்றியும், கேத்திர கணித மற்றும் பொறிமுறை வரைதல் பாடத்தின்போது அடிப்படை வரைதல் பயிற்சியையும் பெற்றனர்.

கல்லூரிமட்டக் கலைத்திட்டமானது மூன்று பகுதிகளைக் கொண்டதாக விருந்தது.
அவை:

- மையப்பாடங்கள்
- விருப்புக்குரிய பாடங்கள்
- செயற்றிட்ட வேலை

ஆகியனவாகும்.

மையப் பாடத்திட்டத்தில் பின்வரும் பாடங்கள் அடங்கியிருந்தன.

- முதன் மொழி (சிங்களம்/தமிழ்)
- இரண்டாம் மொழி
- அடிப்படை புள்ளிவிபரவியல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அடிப்படை கோட்பாடுகள்
- எமது கலாசார மரபுரிமையும் இலங்கையின் சமூக பொருளாதார சுற்றாடலும்
- அடிப்படை சமூக விஞ்ஞான கோட்பாடுகள்

விருப்புக்குரிய பாடங்கள் நான்கு பாடதுறைகளினூடாக பின்வருமாறு ஒழுங்கமைந்திருந்தன. அவையாவன

- விஞ்ஞானப்பாடத்துறை
- வணிக மற்றும் வர்த்தகக் கல்வி
- சமூக விஞ்ஞானம்
- மொழிகள், மானிடவியல் மற்றும் அழகியல்

  மாணவர்கள் தாம் தேர்ந்தெடுத்த பாடத்துறையிலிருந்து இரண்டு பாடங்களைக் கற்க வேண்டியிருந்தது.

## கல்வி நிருவாகம் தெடர்பாக முன்று சீர்திருத்தங்கள்

1971 ஆம் ஆண்டு வரை கல்வி நிருவாகத்தினரின் பதவிநிலைகள் பாடசாலை பரீட்சகர்கள் (வட்டார கல்வி அதிகாரிகள்), மாவட்ட பரீட்சகர்கள் (கல்வி போதனாசிரியர்கள்), உதவி பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோர் ஒரு பிரிவினராகவும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் மற்றைய பிரிவினராகவும் கருதப்பட்டனர். மேற்படி கல்வி நிருவாகிகள் யாவருக்கும் கல்வி நிருவாகத்தின் எல்லா அம்சங்கள் தொடர்பாகவும் அனுபவங் களைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கை கல்விச் சேவை (SLES) எனும் சேவை ஒரு இணைந்த சேவையாக தாபிக்கப்பட்டது. பின்னர் இதன் பதவிப்பெயர் இலங்கை கல்வி நிருவாக சேவை(SLEAS) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வேலை உலகுடன் தொடர்புடையதாக மாணவர்களின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்யக்கூடியதாக கலைத்திட்டத்தைப் பொருத்தப்பாடுடைய தாக்கும் வகையில் 1972 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்கள் வலுவான கல்வி கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. ஆரம்பக்கல்வியின் சீர்திருத்தங்கள் கல்விசார் முன்னேற்றகரமான கொள்கைகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. சுற்றாடலுக்கேற்ற வாறு கலைத்திட்டத்தை மாற்றியமைக்க ஆசிரியர்களுக்கு வசதி வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரசைக்கும் தேவையான பரந்த அளவான பொதுக் கல்வியை கனிட்ட இடைநிலை வகுப்பைச் சேர்ந்த

பொதுக் கலைத்திட்டம் வழங்கியது. சிரேட்ட இடைநிலை கலைத்திட்ட மானது பொதுப்பாடங்களையும் மாணவர் தொடர்ந்தும் கற்க விரும்பும் பாடங்களையும் உள்ளடக்கிய விசேட பாடங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. இதன் மூலம் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெறாத பெரும் எண்ணிக்கையான மாணவர்களின் தேவையை அது நிறைவேற்றியது. பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர விரும்புகின்ற மாணவர்கள் எதிர் நோக்கக் கூடிய யாதாயினும் இடைவெளிகளை நிரப்புவதற்கேற்றவாறு அடிப்படை ஆண்டொன்று பிரேரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இச்சீர்த்திருத்தங்கள் தொடர்பாக பின்வரும் விமரிசனங்கள் எழுந்தன. பாடசாலை காலத்தை 12 வருடங்களிலிருந்து 11 வருடங்களாக குறைத்தல் மற்றும் முதலாம் தரத்தின் புகுமுக வயதை ஐந்திலிருந்து ஆறாக உயர்த்துதல் ஆகிய நடவடிக்கைகள் கல்விக்கான செலவைக் குறைக்கும் நடவடிக்கைகளாகக் கருதப்படு கின்றன. பாடசாலைக் காலத்தைக் குறைத்தமை இலங்கையின் பரீட்சை சான்றிதழ்களை வெளிநாட்டு பல்கலைக்கழகங்களினால் ஏற்றுக் கொள்ளப்படுமா என்ற சந்தேகத்தை எழுப்பியது. தொழில் முன்னிலைப் பாடத்தை அறிமுகஞ் செய்தலானது நிலப்பிரபுத்துவ வாதத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான ஒரு முயற்சியாக விவரிக்கப்பட்டது. மேலும் பொது மக்களின் அபிப்பிராயம் கோராதும், போதியளவு அளவு நிதி ஒதுக்கீடு இன்றியும் அவசரமாக சீர்திருத்தங்களை அறிமுகஞ் செய்தது மற்றைய பின்னடைவாகும்.

**1977 ஆம் ஆண்டில் மேற்படி பிரச்சினைகளில் சில தேர்தல் மேடைகளில் உரையாடப்பட்டன.**

## 1977 இல் அறிமுகஞ் செய்யப்பட்ட மாற்றங்கள்

எதிர்கட்சியினர் தேர்தலில் வென்று பதவிக்கு வந்த அதே சமயம் தேர்தல் மேடைகளில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பற்றி ஆழமாக ஆராயாது அவர்களினால் செயற்படுத்தப்பட்டன. முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வயது ஆறிலிருந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டது. க.பொ.த (சா.தரப்) பரீட்சை பாடங்கள் சிற்சில

மாற்றங்களுடன் செயற்படுத்தப்பட்டன. ஒன்றிணைந்த விஞ்ஞானம், சமூகக் கல்வி ஆகிய பாடங்கள் தொடர்ந்தும் ஒன்றிணைந்த பாடங்களாகவே கற்பிக்கப்பட்டன. தொழில் முன்னிலைப்பாடங்களுக்கு பதிலாக தொழினுட்ப பாடங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. பாடசாலை பாடநெறிக்காலம் 13 வருடங்களாக நீடிக்கப்பட்டது. 6+3+2+2. மிகவும் பாதிப்பான நிகழ்வாக கருதப்படுகின்ற விடயம் யாதெனில் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் வகிபாகம் குறைவாக மதிக்கப்பட்டதாகும். அதன் விளைவாக அதனால் ஆரம்பிக்கப்பட்ட பாடவிதான புத்தாக் கங்கள், ஆசிரிய அபிவிருத்தி ஆகியன குறைவாக மதிப்பிடப்பட்டன. இந்நிலையத்தின் பிரதான உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய உத்தியோகத்தர்கள் அவ்விடங்களுக்கு கொண்டுவரப்பட்டனர்.

இக்காலகட்டத்தில் அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகள் சில பின்வருமாறு. கட்டணம் அறவிடாத பாடசாலைகளுக்கு உதவிவழங்க லும் அவற்றை மீள நிறுவுவதற்காக 1981 ஆம் ஆண்டின் 65ஆம் இலக்க சட்ட மூலத்தினால் சட்டரீதியான அந்தஸ்து வழங்கலுமாகும்.

எவ்வாறாயினும் 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற அமைச்சர் மாற்றத்துடன் நிலைமைகள் மீண்டும் சீரமைந்தன. திரு போகொட பிரேமரத்ன அவர்களின் தலைமையின் கீழ் செயற்பட்ட கல்வி சீர்திருத்தத் திற்கான கமிட்டி அறிக்கை வெளியிடப்பட்டது. அத்துடன் வைத்திய கலாநிதி ஞானலிங்கம் அவர்களின் கீழ் பணிபுரிந்த தொழினுட்ப கல்விக்கான கமிட்டியும், திரு எச்.டி. சுகதபாலா அவர்களின் தலைமை யின் கீழ் செயற்பட்ட தேசிய பயிலுனருக்கான பயிற்சியும் அவற்றின் அறிக்கைகளை முன்வைத்தன.

## 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கை

மேலே பெயர் குறிப்பிட்ட பிரதான மூன்று கமிட்டிகளினதும் பிரேரணை களை அடிப்படையாகக்கொண்டு கல்விச் சீர்திருத்தங்கள் வெளியிடப் பட்டன. பொதுக் கல்வி தொடர்பாக அதிலிருந்த பிரேரணைகள் பின்வருமாறு.

1. **பாடசாலைக் காலம்** பின்வருமாறு அமைந்திருந்தது. ஆரம்பக் கல்வி 5 ஆண்டுகள், கனிட்ட இடைநிலைக்கல்வி 3 ஆண்டுகள், சிரேட்ட இடைநிலைக்கல்வி 3 ஆண்டுகள், கல்லூரிமட்டம் 2 ஆண்டுகள்.

2. பாடசாலை வசதிகளுக்கிடையில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காகவும் கூடிய வினைத்திறனைப் பெறுவதற்காகவும் பாடசாலைகளை சீரமைப்பதற்காகவும் பாடசாலைகள் கொத்தணி களாக வகைப்படுத்தப்பட்டன. ஒத்த புவியியல் பரப்பினுள் காணப் படுகின்ற பாடசாலைகளை மேம்படுத்துவதற்காகவும் முகாமைத் துவம் செய்வதற்காகவும் ஒன்றாகக் கருதப்படுகின்ற பாடசாலை கள் தொகுதியொன்று கொத்தணி எனப்படும். இதன்போது பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களின் உச்ச பயனை பிரதேசத்திலுள்ள சகலரும் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப் படும்.

3. **ஆசிரியர் சேவை:** மாவட்ட ஆசிரியர் சேவை தாபிக்கப்பட்டதுடன் ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் பாடசாலை களுக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக அவர்களுக்கு சேவை முன் பயிற்சி வழங்கப்பட்டது.

## 4. கலைத்திட்ட மாற்றங்கள்:

**ஆரம்ப கலைத்திட்டம்** - இயற்கையை அவதானிப்பதன் மூலமும் வரைதல், நடனமாடுதல், பாடுதல், நடித்தல், அபிநயித்தல் போன்ற அவரவரது இயற்கையான பிறவி ஆற்றல்கள் மூலமும் தனது

ஆளுமையை வெளிக்காட்டவும் வீட்டிலிருந்து பாடசாலைக்கான தமது இடமாற்றத்தை சீர்செய்து கொள்ள பிள்ளைக்கு உதவவும் எதிர்பார்க்கப் பட்டது. பிள்ளையானது வாசிப்புத்திறன்களையும், எழுத்துத்திறன் களையும், கணிதத் திறன்களையும் கருத்தாளமுள்ள முறையில் பெற்றுக் கொள்ள உதவ எதிர்பார்க்கப்பட்டது. இது சுற்றாடல் செயற்பாடு களுக்கும் கலைத்திட்டத்தின் ஏனைய விடயங்களுக்கும் அதே விதமாகப் பொருந்தும்.

**கனிட்ட இடைநிலை பருவம்:** இப்பருவத்தைச் சேர்ந்த பொதுக் கலைத்திட்டம் 9 பாடங்களைக் கொண்டது. முதன்மொழி, சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, அழகியல் கல்வி, வாழ்க்கைத் திறன்கள், மற்றும் சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகியன அவையாகும். வாழ்க்கைத் திறன்கள் எனும் பாடம் தொழினுட்ப பாடங்களுக்கு மாற்றீடாக அமைந்தது. தொடர் மதிப்பீடு என்ற எண்ணக்கரு மதிப்பீடு தொடர்பாக அறிமுகஞ் செய்யப்பட்டது. தரம் 8 இன் இறுதியில் தொடர் மதிப்பீட்டினதும் திரண்ட மதிப்பீட்டினதும் பெறுபேறுகளைக் காட்டும் வகையில் அறிக்கையொன்று தரப்படும்.

**சிரேட்ட இடைநிலைப் பருவம் :** இப்பருவத்திலும் பொதுக்கல்வியின் நோக்கங்களை பெறுவதன் முக்கியத்துவம் தொடர்ந்து எடுத்துக் காட்டப்பட்டது. எனினும் இப்பருவத்தின் இறுதியில் பரீட்சையொன்று நடாத்தப்பட உள்ளபடியால் வேலை உலகிற்கு மாறும் நடவடிக்கைக்கு தொழினுட்பக் கல்வி வசதி வழங்குகின்றது. இப்பருவத்தின் இறுதியில் மாணவர் க. பொ.த சாதரணதரப் பரீட்சைக்கு தோற்றுவர். இது ஒரு தேசிய சான்றுபடுத்தும் பரீட்சையாகும். முதலாம் மொழி, கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், மற்றும் சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் தேசிய மட்டத்தில் பரீட்சிக்கப்படும்.

ஏனைய பாடங்கள் மாவட்ட அல்லது கொத்தணி மட்டத்தில் பரீட்சிக்கப்படும்.

**கல்லூரி மட்டம்:** பல்கலைக்கழகத்திற்கும் உயர்கல்விக்கும் மூன்றாம் நிலைக் கல்விக்கும் வழிப்படுத்தும் பருவம் இதுவாகும். இதன்

கலைத்திட்டம் ஒரு மையப்பாடத்தையும் விசேட பாடங்களையும் கொண்டது. இலங்கையின் கலாசார பாரம்பரியம் மற்றும் சமூக பொருளாதார சுற்றாடல், முதலாம் மொழி, ஆங்கிலம், சமூகத்தைத் திசைப்படுத்திய செயற்றிட்டம் ஆகியன மையக் பாடங்களாகும். விசேட பாடங்கள் இரண்டு துறைகளினூடாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை கலையும் விஞ்ஞானமு மாகும். மாணவர்கள் ஒரு துறையிலிருந்தோ இரண்டு துறைகளிலுமிருந்தோ மூன்று பாடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வெள்ளையறிக்கை வெளியானவுடன் தீவிரவாத மாணவர் இயக்கத்தினரால் மேற்படி பிரேரணைகள் கடுமையாக விமரிசிக்கப்பட்டன. உண்மையில் இவ்வெதிர்ப்புக்கள் அரசியல் அடிப்படையிலானதன்றி உண்மையானதல்ல. இதனால் மேற்படி பிரேரணைகளை எதிர்பார்த்தபடி அமுல்படுத்த முடியவில்லை.

வெவ்வேறு தரத்தவரிடமிருந்து எழுந்த எதிர்ப்பு காரணமாக முதலில் கொத்தணி முறையும் வகுப்பறைக் கட்டமைப்பும் அமுல்படுத்தப்பட்ட போதிலும் பின்னர் கைவிடப்பட்டது. கொத்தணி முறையின் போது மையப்பாடசாலையின் அதிபர் கொத்தணியின் தலைவராகச் செயற்பட்டார். அவர் ஏனைய பாடசாலைகளின் அதிபர்களுக்கு தலைமைத்துவம் வழங்குபவராகவும், வளங்களை பகிர்ந்து கொள்ப வராகவும் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் உண்மையில் இதற்கு மாற்றமான விடயங்களே நடைபெற்றன. அவர் தனது செயற்பாடுகளை ஒரு எதேச்சகார முறையில் மேற்கொண்ட அதே சமயம் வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு பதிலாக யாவற்றையும் தனது பாடசாலைக்காக ஒதுக்கிக் கொண்டார், அல்லது அவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் அவருக்கு எதிரிகளாகினர். மேலும் வளங்கள் நிறைந்த பெரிய பிரபல நகர்ப்புறப் பாடசாலைகள் கொத்தணி முறையில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. அவை ஒற்றைப் பாடசாலைகளாக அபிவிருத்தியடைய இடமளிக்கப்பட்டன. (பின்னர் அவை தேசிய பாடசாலைகளாக பெயர் மாற்றம் செய்யப்பட்டன). அவை நிதி

அடிப்படையில் சுயாதீனமானதாகக் கருதப்பட்டன. அதனால் இலவசக் கல்வி பாகுபாடானதாக செயற்படுத்தப்பட்டதாக எதிர்ப்புத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்பட்டது. பாடசாலை ஆசிரியர்களின் வேலைப்பளுவை அதிகரித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு தொடர் மதிப்பீட்டுத் திட்டமானது ஆசிரியர் சங்கங்களின் கடும் எதிர்ப்புக்கும் கண்டனத்திற்கும் ஆளாகியது.

எனினும் மேற்படி பிரேரணைகளினால் ஏற்பட்ட அடைவுகள் இரண்டாகும். அவை 1985 ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டமொன்றினால் "தேசிய கல்வி நிறுவகம்" தாபிக்கப்பட்டமையும், ஆசிரியரின் முன்சேவைப் பயிற்சிக்காக "தேசிய கல்விக் கல்லூரிகள்" தாபிக்கப்பட்டமையும் ஆகும்.

பாடசாலை முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதல்வரிசை முகாமையாளர் என்ற ரீதியில் அதிபரின் வகிபாகத்தின் முக்கியத்துவம் இனங்காணப்பட்டது. பாடசாலைகளை வலுவூட்டும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பாடசாலை மட்ட திட்டமிடல் எடுக்கப்பட்ட மற்றைய நடவடிக்கையாகும். வலயக்கல்விக் காரியாலயங்களை பாடசாலைகளுக்கு கல்விசார்பாக உதவும் மையங்களாக மாற்றும் திட்டம் பரிசோதிக்கப்பட்டது. எனினும் அத்திட்டம் பின்னர் கைவிடப்பட்டது. குறித்த பத்தாண்டின் இறுதியில் கொத்தணி முறை கைவிடப்பட்டது. கோட்டப் பணிப்பாளர்கள் கோட்டத்திற்கு பொறுப்பான அதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டனர்.

## 13 ஆம் அரசியல் சீர்திருத்தத்தின்கீழ் கல்வியின் அதிகாரங்களைப் பரவலாக்கல்.

1987 இல் அரசியல் அமைப்பிற்கான 13 ஆம் திருத்த மசோதா இயற்றப்பட்டு மாகாண சபைகள் தாபிக்கப்பட்டன. கல்வி அமைச்சின் செயற்பாடுகள் பல மாகாண அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டன. எல்லா மாகாணப் பாடசாலைகளும் உரிய மாகாண சபைகளுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டன. அதாவது 9 ஆம் அட்டவணையின் 1 ஆம் பட்டியலின் பின்னிணைப்பு 111 இல் குறிப்பிடப்பட்டிருந்த திருத்தத்தின்படி எல்லா

மாகாண பாடசாலைகளினதும் முகாமைத்துவம் அந்தந்த மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டன. 9732 அரசாங்கப் பாடசாலைகளில் 9370 பாடசாலைகள் மகாண சபைகளின் கீழ் வந்த அதே சமயம் 342 தேசிய பாடசாலைகள் மாத்திரமே மத்திய அமைச்சின் நிருவாகத்தின் கீழ் வந்தன. மத்திய அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்ட விடயத் தலைப்புக்கள் கொள்கை உருவாக்கல், திட்டமிடல், தேசிய பாடவிதானம், ஆசிரியர் கல்வி, பரீட்சைகள், பாடநூல்கள் தயாரித்தல், விநியோகித்தல் ஆகியனவாகும். 1AB மற்றும் 1 C பாடசாலை அதிபர்களின் நியமனங்கள் மத்திய அமைச்சினால் மத்திய பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் செய்யப்பட்டன.

மாகாணங்களில் புதிய ஒரு கல்வி முகாமைத்துவக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. கோட்டக் கல்விக் காரியாலயங்கள், வலயக் கல்விக் காரியாலயங்கள், மாகாணக் கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு ஆகியன தாபிக்கப்பட்டன. மாகாணத்திலுள்ள 1000 பாடசாலைகளுக்காக இந்தளவு விரிவான கட்டமைப்பொன்று தேவையா என்பது ஒரு கேள்வியாகும். ஒரு தொகுதியில் பல வரிசைகள் இருக்கும் போது அது அத்தொகுதியின் வினைத்திறனைப் பாதிக்கும் அதே சமயம் தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்பாகவும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். ஜனநாயக கோட்பாடுகளின்படி அதிகாரப்பரவலாக்கல் என்பது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாக இருந்த போதிலும் மாகாண சபைகளைத் தாபித்ததிலிருந்து அவற்றின் நடவடிக்கைகளை நோக்கும் போது அவை கேள்விக்குறியாகவே அமைந்திருக்கின்றன. அதிகாரப் பரவலாக்கத்தின் விளைவுகளாகத்தக்க இரண்டு பிரதான மாற்றங்கள் நிருவாக செலவினங்களின் அதிகரிப்பும் நிருவாக விடயங்களில் அரசியல் தலையீடுகளின் அதிகரிப்புமாகும்.

## 1997 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் (NEC) சீர்திருத்தங்கள்

1988 - 1989 களில் தென் பகுதி இளைஞர்களின் இரண்டாவது கிளர்ச்சி உருவாகியது. அதனை அடக்கிய பின்னர் உடனடியாக அரசாங்கம் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்தது. இளைஞர்களின்

அமைதியின்மைக்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து தீர்வுகளைத் கோரியது. ஆணைக்குழுவானது இதற்கான ஒரு முக்கிய காரணமாக கல்வியை இனங்கண்டது. ஆகவே கல்விக் கொள்கையானது அரசியல் கொள்கையிலும் மேலானதாக இருக்க வேண்டுமென ஆணைக்குழு விதந்துரைத்தது. ஆகவே அரசாங்க மாற்றங்களின்போதும் கல்விக் கொள்கை மாறாது தொடர்ச்சியாக பேணப்பட வேண்டுமென கருத்துக் கூறப்பட்டது. ஒரே கட்சியாக இருக்கும் சமயங்களில் கூட அமைச்சர் மாறும்போது கல்விக் கொள்கைகள் மாற்றமடைவது இங்கு எடுத்துக் காட்டப்பட்டது. ஆகவே அரசாங்கமானது அப்போதைய எதிர்கட்சியுடன் கலந்தாலோசித்து ஒரு தேசியகல்விக் கொள்கையை உருவாக்குவதற் காக தேசிய கல்வி ஆணைக் குழுவொன்றை உருவாக்கியது. அதன்படி 1991 இன் 19ஆம் இலக்க சட்டவாக்கத்தின் மூலம் தேசிய கல்வி ஆணைக் குழுவொன்று தாபிக்கப்பட்டது. இரண்டு கட்சிகளும் சேர்ந்து செயற்பட்டமையால் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பது கூட ஒற்றுமையாக நடைபெற்றது. ஆகவே உருவாக் கப்பட்ட ஆணைக்குழு சிறப்பாக இயங்கக்கூடியதாகவிருந்தது. இதனால் அரசாங்கத்திற்கு கல்வி சார் விடயங்களில் ஆலோசனை கூறுவதற்கான நிரந்தரமான ஒரு அமைப்பாக இது அமைந்தது.

1992 ஆண்டு பொதுமக்களின் அபிப்பிராயங்களைக் கோரியதன் பின்னர் தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை கல்வி தொடர்பான தேசிய இலக்குகளை முறைப்படுத்திய அதே சமயம் அவ்விலக்குகளை அடைவதற்கு கட்டாயமாக இருக்க வேண்டிய ஒரு அடித்தளமாக தேர்ச்சிகள் தொகுதியொன்றை இனங்காட்டியது. எனினும் அறிக்கையில் இவ்விடயம் சிறிது மாற்றமாகக் காட்டப்பட்டிருந்தது. “Envisioning Education for Human Development” (NEC - 2003) அன்றிலிருந்து கொள்கை திட்டமிடுப வர்களுக்கும் கலைத்திட்ட வடிவமைப்பாளர்களுக்கும் வழிகாட்டியாக மேற்படி இலக்குகளும் தேர்ச்சிகளும் அமைந்திருந்தன. “(An action oriented stertagy towards the national educational policy) தேசிய கல்விக் கொள்கையை நோக்கிய செயற்பாட்டு அடிப்படையிலான தந்திரோபாயம்” என்ற

ஆவணத்தை 1995 இல் ஆணைக்குழு வெளியிட்டது. பொதுக் கல்வியின் பின்வரும் துறைகள் பற்றி இந்த ஆவணம் குறிப்பிடுகிறது.

- கல்வி வாய்ப்புக்களை நீடித்தல்
- கல்வியின் தர மேம்பாடு
- ஆசிரியர் தொழில்
- கல்வித் தொழினுட்பம் மற்றும் பிரயோக திறன்கள்
- கல்வி மற்றும் அது தொடர்பான வளங்களை முகாமைத்துவம் செய்தல்

NEC சட்ட விதிகளின்படி, மேற்படி ஆவணமானது ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி ஆலோசனைகளை அமுற்படுத்த ஒரு ஜனாதிபதி செயற்பாட்டு அணி தாபிக்கப்பட்டது. மேற்படி செயற்பாட்டு அணி பிரேரணைகளின் வெவ்வேறு விடயங்களை ஆராய்வதற்காக 12 உபகுழுக்களைத் தாபித்தது. குறித்த உப குழுக்களின் விதப்புரைகள் பொதுக் கல்விச் சீர்திருத்தங்கள் - 1997 என்ற தலைப்பில் வெளியிடப்பட்டன. ஜனாதிபதி அவர்கள் 1997 ஆம் ஆண்டை பொதுக்கல்வியின் சீர்திருத்தங்களுக்கான ஆண்டு எனப் பெயரிட்டார் மேலும் 1998 ஜனவரி முதல் இதன் பிரேரணைகளை அமுல்படுத்தல் ஆரம்பமாகியது.

கட்டாயக் கல்விக்கான காலகட்டமாகிய 5 - 14 வயது வரையான கால கட்டத்தில் கட்டாயமாக பாடசாலைக்கு வருகை தருவதை உறுதி செய்வதற்காக பொருத்தமான சட்டதிட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களில் பாடசாலைக்கு மாணவர் வருகை தருவது தொடர்பான குழுக்களும், பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் கண்காணிப்புக் குழுக்களும் நியமிக்கப்பட்டன. இது தொடர்பாக ஊடகங்களினூடாகச் செய்யப்பட்ட பிரச்சாரங்கள் நல்ல விளைவுகளைத் தந்தன. அதன் பலனாக பாடசாலை செல்லாத பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் முறைசார் பாடசாலைகளிலோ முறைசாரா கல்வி மத்திய நிலையங்களிலோ தமது கல்வியைத் தொடர்ந்தனர்.

ஆரம்பக் கல்வி தொடர்பாக தற்போதுள்ள நடைமுறைகளில் பின்வரும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆரம்பக் கல்விக்கான 5 வருட காலம் 3 பருவங்களாக பிரிக்கப்பட்டன. அவற்றை முதன்மை நிலை 1 முதன்மை நிலை 2 முதன்மை நிலை 3 என்பர்.

**முதன்மை நிலை 1** - முதலாம் இரண்டாம் தரங்கள் முதன்மைப் பருவம் 1 ஐச் சேர்ந்தவையாகும். வழிகாட்டலுடன் கூடிய விளையாட் டுக்கள் மூலம் இப்பருவத்தில் போதனை நடைபெறும்.

**முதன்மை நிலை 2** - மூன்றாம் நான்காம் தரங்கள் இதிலடங்கும். செயற்பாடுகள் மூலமும் உட்கார்ந்து செய்யும் வேலைகள் சிலவற்றின் மூலமும் இப்பருவத்தில் கற்றல் நடைபெறும்.

**முதன்மை நிலை 3** - தரம் 5 இன் போது செயற்பாடுகளுடன் கூடிய அமர்ந்து செய்யும் வேலைகளில் அதிகமாக ஈடுபடுவர்.

முதன்மொழி, கணிதம், சமயம் மற்றும் சுற்றாடல் செயற்பாடுகள் இதன்போது கற்பிக்கப்படுகின்ற பாடங்களாகும். விஞ்ஞானச் செயற் பாடுகள், சுற்றாடல்சார் செயற்பாடுகள், பாடத்துடன் ஒன்றிணைந்த பாடங்களாக ஆக்கச் செயற்பாடுகள், அழகியல் செயற்பாடுகள் ஆகியன அமைந்திருந்தன.

அதற்கு மேலதிகமாக செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழிமூல ஆங்கிலம் (ABOE).

தொடர்பாடல் வசதி கருதி அறிமுகஞ் செய்யப்பட்டது. NEC யினால் இனங்காணப்பட்ட தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கான அடிப்படையாகச் செயற்படத்தக்கவாறு பணியாற்ற மேற்படி கலைத்திட்டம் திட்டமிடப்பட் டிருந்தது. ஆரம்பக் கல்வி, ஆரம்பக் கணிதம் ஆகியவற்றுக்கான பிரதான திட்டங்களைத் தயாரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படையில் வெளிநாட்டு உதவி கிடைப்பதற்கான வாய்ப்பிருந்தது. முதன் முதலில் மேற்படி நிகழ்ச்சித்திட்டம் கம்பஹா மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக செயற்படுத்தப்பட்ட போதிலும் பின்னர் அடுத்தடுத்த வருடங்களில் அது நாடு பூராவும் விஸ்தரிக்கப்பட்டது.

**இடை நிலை:** கனிட்ட இடை நிலைப்பருவம் 4 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்ட அதே சமயம், சிரேட்ட இடை நிலைப்பருவத்திலிருந்து ஒரு ஆண்டு குறைக்கப்பட்டது. இதன் பயனாக கனிட்ட இடைநிலை பருவம் 6ஆம் தரத்திலிருந்து 9 ஆந் தரம் வரை நீடிக்கப்பட்ட அதே சமயம் க.பொ.த சா.தரம் இரண்டு வருடங்களாக குறைக்கப்பட்டது. வாழ்க்கைத் திறன்கள் பாடத்திற்கு பதிலாக செய்முறை மற்றும் தொழினுட்பத் திறன்கள் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர் மதிப்பீடானது பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டின் மூலம் வலுவூட்டப்பட்டது. க.பொ.த (சா.தர)த்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்காக பல்கலைத்திட்டம் செயற்படுத்தப் பட்டது. எனினும் பின்னர் அது கைவிடப்பட்டு (சா.தர)ப் பரீட்சையில் இரண்டு பாடங்கள் இருக்கக் கூடியவாறு திருத்தப்பட்டது. க.பொ.த உ.தரப் பரீட்சையின் பாடங்கள் 4 இலிருந்து 3 ஆக குறைக்கப்பட்டது. தாவரவியல் விலங்கியல் ஆகிய பாடங்களுக்கு பதிலாக உயிரியல் என்ற பாடம் அறிமுகஞ் செய்யப்பட்டது. மேலும் கணிதப் பாடத்திலுள்ள பல பாடத்திட்டங்களுக்கு பதிலாக இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிப்பதற்காக பொது சாதாரணப் பரீட்சை வினாத்தாள் கட்டாயமாக்கப்பட்டது. மேலும் உயர் தரத்தில் கலைத் துறை மாணவர்களுக்கு வேலை உலகிற்கு பயனாயமையத்தக்க தொழினுட்ப பாடத்துறை யொன்று இருக்க வேண்டுமென்பதும் இங்கு வலியுறுத்தப் பட்ட ஒன்றாகும்.

இங்கு விதந்துரைக்கப்பட்ட மற்றைய மாற்றங்களாக பாடசாலை மட்ட முகாமைத்துவம் அறிமுகஞ் செய்யப்படல், ஆசிரியர் கல்வி வலுவூட்டப்பட்டல், ஆசிரியர் தொழிலை சீரமைக்கக்கூடிய தொழில்சார் சபையொன்றை உருவாக்குவதல் ஆசிரியர்களின் ஆற்றுகையை மதிப்பிடல் ஆகியவற்றை எடுத்துக் காட்டலாம்.

1998 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய கலைத்திட்ட கோட்பாட்டின்படி, கலைத்திட்ட வட்டம் எட்டாண்டு காலத்தைக் கொண்டது. அதன்படி கலைத்திட்டத்தை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தேவையான மாற்றங்களை செய்யவும் திட்டம் தீட்டப்பட்டது. எவ்வாறாயினும் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக உத்தேச மாற்றங்கள் கைவிடப்பட்டன.

## உதவிவழங்கும் முகவர்களினால் கல்விக் கொள்கைகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள்

2004 ஆம் ஆண்டில் NEC யானது கொள்கை அடிப்படையிலான ஆவணமொன்றை வெளியிட்டது.

"Envisioning Education for Human Development - இலங்கையின் பொதுக்கல்வி தொடர்பான தேசிய கொள்கை சட்டகத்தின் முன்மொழிவுகள்" என்ற கொள்கை ஆவணத்தை NEC 2004 இல் வெளியிட்டது. (NEC 2004). இதில் அடுத்த கட்டத்திற்கான கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகள் தரப்பட்டிருந்தன. இக்காலகட்டத்தில் கல்வித் துறையானது குறிப்பிட்டளவு வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றது. விசேடமாக ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியன இவ்வாறு உதவி வழங்கிய பிரதான நிறுவனங்களாகும். அவை NEC யின் சில பிரேரணைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அக்கறை காட்டின. உலக வங்கி யினால் பிரேரிக்கப்பட்ட ESDFP எனப்படும் கல்வித்துறை சார்ந்த அபிவிருத்தி சட்டகம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றை அமைக்க கல்வி அமைச்சு இணங்கியது. ESDFP யின் பிரதான துறைகள் பின்வருமாறு.

1. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான பிரவேச வாய்ப்புக்களை சமஅளவாக அபிவிருத்தி செய்தல்
2. கல்வியின் தரத்தை மேம்படுத்தல்
3. வள ஒதுக்கீடு தொடர்பாக பொருளாதார ரீதியிலான வினைத்திறனை அதிகரித்தல்
4. வளப் பங்கீட்டின் சமத்தன்மையையும், சேவை வழங்கலையும் அதிகரித்தல்

கல்வி அமைச்சினால் 2006 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கல்வித் துறையின் அடிப்படைகளை மேற்படி தலைப்புக்கள் உருவாக்கின. இந்தத் திட்டத்தின் கீழ் அரசாங்கமும் உலக வங்கியும் துறை பரந்த அணுகுமுறையினை(SWAp) ஏற்றுக் கொண்டது. இங்கு வழங்குனரின் பணத்தை அரசாங்க வரவு செலவு திட்டத்தின் மூலம் ESDFP யிற்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. தற்போதுள்ள தனியான செயற்றிட்ட அலகை தாபிக்கும் முறை கைவிடப்பட்டது. இது மொத்த கல்வித் துறையின் திட்டத்திற்கு அரசாங்கமும் நிதிவழங்கும் முகவரும் ஏற்றுக் கொண்ட நியதிகளின் அடிப்படையில் இணைந்து கண்காணிப்பதற்கும் வசதி வழங்கியது. அதன் மூலம் கல்வித் திட்டங்களை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கான ஒரு பொறிமுறை உருவாகியது. எவ்வாறாயினும் ADB யானது இம்முறையில் இணைந்து கொள்ளவில்லை. ஆகவே ADB யினால் நிதி வழங்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்றிட்ட முறையையே பின்பற்றின.

இந்த ஒழுங்கமைப்பின் கீழ் பெற்ற அனுகூலங்களாக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

பெரும் எண்ணிக்கையிலான பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் முறைசார் பாடசாலைகளுக்கும் எழுத்தறிவு மையங்களுக்கும் சேர்த்துக் கொள்ளப்படல். தேர்ச்சி அபிவிருத்திக்காக கலைத்திட்ட சீர்திருத்தங்களில் ஈடுபடல். விஞ்ஞான ஆய்வு கூடம் போன்ற உயர் மட்ட தர விருத்திக்காக நிதி வழங்கல், தகவல் தொடர்பாடல் தொழினுட்ப மையங்களை உருவாக்கல், பாடசாலை அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை (PSI) அறிமுகம் செய்தல், உருளும் திட்ட அணுகுமுறை (Rolling plan approach) யைப் பின்பற்றல் மற்றும் நிதிகளை சரியாகப் பயன்படுத்தல். 2012 இல் இந்நிகழ்ச்சித்திட்டம் முடிவடைந்தவுடன் 2012-2016 ஆண்டுகளுக்காக சமமான வழிகளில் அடுத்த அமுல்படுத்தும் திட்டம் தயார்படுத்தப்பட்டது.

## 1960 - 2006 காலகட்ட கல்விச் சீர்திருத்தங்களின் மீளாய்வு

வெவ்வேறு காலகட்டங்களில் சீர்திருத்தவாத கொள்கையாளர்களினால் நடைமுறைப் படுத்தப்பட்ட தந்திரோபாயங்களையும், நோக்கங்களையும் பிரதிபலிக்கும் வகையில் விடயங்களை முன்வைக்கின்றேன். சீர்திருத் தத்தின் எல்லாப் பருவங்களிலும் சமவாய்ப்புக்களையும், தரத்தையும் கருத்திற்கொள்ளும் இரண்டு நோக்கங்கள் உள்ளன. ஒவ்வொரு பிள்ளைக்கும் அதன் வயது, தராதரம், இனம், மொழி, சமயம், சமூக பொருளாதார நிலைகள் போன்ற யாதொன்றையும் கவனத்திற் கொள்ளாது யாவருக்கும் ஒரே மாதிரியாக வாய்ப்பு வழங்குவதே சமவாய்ப்பு எனப்படும்

கல்வி தொடர்பான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதன் மூலம் இதனை நாம் குறிப்பிட்ட அளவு அடைந்துள்ளோம். நாடு பூராவும் பரந்துபட்ட இலவச கல்வி வழங்கும் பாடசாலை வலையமைப்பொன்று உருவாக்கப் பட்டுள்ளது. அதன் பயனாக நாடு சர்வதேச ரீதியில் ஆரம்பக் கல்வியின் உயர் மட்டத்தின் விளிம்பில் உள்ள அதே சமயம், வயதுவந்தோரின் எழுத்தறிவு 94% வீதமாகவும், இடைநிலை வகுப்பில் சேர்ந்து கொள்வோரின் எண்ணிக்கை 90 % இலும் கூடுதலாகவும் உள்ளது. சும அளவான தனிநபர் வருமானம் பெறும் பெரும்பாலான நாடுகளிலும் பார்க்க இலங்கையின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாக உள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக இலவசக் கல்விப் போதனை, இலவச பாடநூல், இலவச பாடசாலைச் சீருடை, இலவச மருத்துவ வசதி, ஆரம்பப் பாடசாலை மாணவருக்கு இலவச மதிய உணவு, திறமை யுடைய வசதியற்ற பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் போன்ற பல்வேறு வசதிகள் வழங்கப்படுகின்றன. எவ்வாறாயினும் அனைவருக்கும் தரமான கல்விக்கு சுயாதீனமாக அணுகுவழி என்பது ஒரு கேள்விக் குறியாகும்.

தரம் என்பதன் பொதுவான கருத்து பாவனைக்குகந்தது என்பதாகும். ஜனநாயக சமுதாயமொன்றில் குடிமகன் என்ற அடிப்படையில் ஒருவரினால் வெற்றிகரமாக வாழ்க்கையைப் நடாத்தக் கூடியவாறு பாடசாலை கல்வியை வழங்கியிருத்தல் வேண்டும். சமூகம் இதனையே

பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும் ஒரு மாணவனிடம் எதிர்பார்க்கின்றது. பாடசாலையை விட்டு வெளியேறும் ஒரு மாணவனின் வாழ்க்கை வெற்றியடைந்துள்ளதா என்பதை, குறித்த செயன்முறை நடைபெற்று நீண்ட காலம் சென்றதன் பின்னரே அறிய முடியும். இதனாற்றான் கல்வியாளர்கள் கலைத்திட்டம் தொடர்பாக அதிக அக்கறை காட்டுகின்றனர். கலைத்திட்டத்திலுள்ள உள்ளடக்கம், முறையியல் ஆகியனவே பிள்ளையின் எதிர்காலத்தைச் சீர் செய்கின்றன. கல்விச் சீர்திருத்தம் என்பது கட்டாயமாக கலைத்திட்டச் சீர்திருத்தமாகும்.

இது தொடர்பாக கலைத்திட்டத்தை சீர்திருத்தியவர்கள் பின்பற்றிய தந்திரோபாயங்கள் யாவை என ஆராய்வோம். பாடசாலை முறைமை யிலுள்ள கட்டமைப்பை மாற்றியமைப்பது ஒரு தந்திரோபாயமாகும். பொதுவாகப் பாடசாலைக் கல்வியின் காலத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். அவை ஆரம்பக் கல்வியும் இடை நிலைக் கல்வியுமாகும். சாதாரணமாக ஆரம்ப கல்வியின் கால அளவு 5 அல்லது 6 வருடங் களாகும். பொதுவாக இடை நிலைக்கல்வி 6 அல்லது 7 வருடங்களாக அமையும். மேற்படி அடிப்படை கட்டமைப்புக்கேற்றவாறே பாடசாலைக் கட்டமைப்பும் ஒழுங்கமைந்துள்ளது.

விசேட குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப ஆரம்பக் கல்வி 6 ஆண்டு காலத்தைக் கொண்டிருந்தது. தரம் 5 இல் அதனை மூன்று பிரிவுகளாக பிரிப்பர். அதாவது பாடசாலையானது இடைநிலை, சிரேட்ட நிலை மற்றும் பிரயோக பாடசாலை என மூன்றாக வகைப்படுத்த பரிந்துரைக் கப்பட்டது. இம்முறையில் 5% மான மாணவர்கள் சிரேட்ட பாடசாலை களில் சேர்ந்து கொள்வர். அவர்கள் பல்கலைகழகங்களிலும் உயர் கல்வி நிலையங்களிலும் தம் கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெறுவர். தொழினுட்ப மற்றும் வணிக பாட நெறிகளில் தம் கல்வியைத் தொடரும் வாய்ப்பு 15% மாணவர்களுக்குக் கிட்டும். 80% மாணவர்கள் பிரயோக பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இது விசேட குழுவின் பரிந்துரைகளில் மிக மோசமாக விமரிசிக்கப்பட்ட ஒரு விடயமாகும். $11^+$ என்பது கல்விசார் துறைகளுக்கோ தொழில் பயிற்சிகளுக்கோ மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மிகவும் குறைந்த வயது என்பது விமரிசகர்களின் கருத்தாகும்.

1961 இல் தேசிய கல்வி ஆணைக்குழுவானது பொதுவான கனிட்ட பாடசாலையொன்றை 8 ஆம் தரம் வரை விதந்துரைத்தது. அதன் பின்னர் நான்கு வகையான சிரேட்ட பாடசாலைகள் விதந்துரைக்கப் பட்டன. மிகச் சிறு திருத்தங்களுடன் இது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் அரசாங்கம் மாற்றமடைந்தவுடன் இதனை நடைமுறைப்படுத்தல் இடைநிறுத்தப்பட்டது. 1966 ஆண்டின் வெள்ளையறிக்கையில் 7ஆம் தரத்தில் வெவ்வேறு துறைகளுக்கு பிரிக்கவேண்டும் என விதந்துரைக்கப்பட்டது. இது 1968 இல் நடைமுறைப்படுத்தப்பட்டதாயினும் 1972 ஆம் ஆண்டின் சீர்திருத்த ஆலோசனைகளுடன் மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாண்டில் கட்டமைப் பானது 5+4+2 என்றவாறு மாற்றியமைக்கப் பட்டது. அதனையே 1977 இல் 5+3+3+2 என்று மாற்றியமைக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டின் பிரேரணைகள் மூலம் இம்முறை மாறாது பேணப்பட்ட அதே சமயம் கலைத்திட்டத்திலுள்ள தொழினுட்ப கூறு வலுவூட்டப்பட்டது. NEC யானது தரம் 9 வரை ஒரு அடிப்படைப் பாடசாலையையும் தரம் 10 தொடக்கம் 13 வரை ஒரு சிரேட்ட பாடசாலையையும் பிரேரித்தது. எனினும் புவியியல் காரணிகள் மற்றும் சனத்தொகை அடர்த்தி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு தக்கவாறு செயற்பட வேண்டும் என்ற கொள்கையை NEC யும் ஏற்றுக் கொண்டது.

வேறு நாடுகளின் பாடசாலைக் கட்டமைப்பை நோக்கும் போது அவை வரலாற்று ரீதியான அடிப்படையைக் கொண்டது என அறிய முடிகின்றது. பிரித்தானியாவும் அதன் காலனித்துவ நாடுகளும் ஆரம்ப, இறைநிலை என்றவாறான இரண்டு அடிப்படை பிரிவுகளாக $11^+$ யைப் பிரிக்கின்றது. யுனெஸ்கோவின் ஆலோசனைப்படி ஆரம்பப் பாடசாலை தரம் 7 அல்லது 8 வரையும் அமையுமாறும், அதன் பின்னர் துறைகளாக பிரிய வேண்டும் எனவும் ஆரம்பக் கல்வி ஒரே கூரையின் கீழ் தரப்படவேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது. வளங்களைப் பயனுறுதி யாகவும், சமவாய்ப்பை வழங்கக் கூடியவாறும் வழங்கும் தேவையுள்ள நிலையில் இலங்கை போன்ற நாட்டில் பாடசாலைகள் அரசாங்கத் தினாலும் சமயக் குழுக்களி னாலும் திட்டமிடப்படாத முறையில் அமைக்கப்பட்டிருத்தல் ஒரு பாரிய தடையாகும். 1961 இல் பாடசாலை

களை அரசாங்கம் கையேற்றதுடன் இதனை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் பல்வேறு சீர்திருத்த ஆலோசகர்களினாலும் இது பிரேரிக்கப்பட்டிருந்தது. இதனையே விசேட குழுவும் பல ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஒரு இடைநிலை பாடசாலை இருக்க வேண்டுமென பிரேரித்தது. 1961 இல் தேசிய கல்வி ஆணைக் குழுவானது பாடசாலை வலயங்களை உருவாக்க விதந்துரைத்தது. 1979 இன் கல்வி ஆணைக்குழுவானது பாடசாலைக் கூட்டமைப்புக்களை உருவாக்க வேண்டுமென விதந்துரைத்தது. 1981 இன் வெள்ளையறிக்கையானது பாடசாலைகளை படவரைபின் அடிப்படையில் பாடசாலை கொத்தணிகளை அமைக்க பிரேரித்திருந்தது. எனினும் பின்னர் அது கைவிடப்பட்டது. 1998 ஆம் ஆண்டின் சீர்திருத்தங்களின்போது பாடசாலை குடும்பங்கள் பற்றி பிரேரிக்கப்பட்டிருந்தது. தற்போது அரசாங்கமானது முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 5000 ஆரம்ப ஊட்டப் பாடசாலைகளையும் 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆரம்பப் பாடசாலையிலும் அதனைத் தொடர்ந்து இடைநிலை பாடசாலையிலும் தரமான கல்வி வழங்கப்படுதல் உறுதி செய்யப்படும் அதே சமயம் பூரணமான கலைத்திட்டமொன்றை போதியளவு வசதிகளுடன் கற்கும் வாய்ப்பைப் பிள்ளை பெறும்.

பாடசாலை முறைமையை அணுகி நோக்கும்போது பெரிய பாடசாலைகள் மேன்மேலும் பெரிதாகி முகாமைத்துவம் செய்ய முடியாத நிலை உருவாகுவதையும், சிறிய பாடசாலைகள் மேன்மேலும் சிறிதாகி நிலவ முடியாத நிலையை அடைந்து மூடப்படுவதையும் காண முடிகின்றது. இதன்படி பாடசாலைகள் முனைவுறுவதாகக் குறிப்பிடலாம். 2013 இல் நடாத்தப்பட்ட பாடசாலை தொகை மதிப்பீட்டின்படி 50 மாணவர்களுக்குக் குறைவான மாணவர்களுடைய 1614 பாடசாலைகள் இருப்பதாகவும், 50 - 100 வரை மாணவர்கள் தொகையுடைய 1516 பாடசாலைகள் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. பெரிய பாடசாலை களிலுள்ள ஆரம்ப வகுப்புக்கள் இல்லாமற் செய்யப்படுமாயின், சிறிய ஆரம்ப பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து

அவை செயற்படும் நிலை உருவாகும். மேலும் வகை II பாடசாலைகள் 4230 இருப்பதாகவும், அவற்றில் ஒன்று முதல் பதினொன்று வரை வகுப்புக்கள் நடைபெறுவதாகவும் அவ்வகுப்புக்களில் 6 - 11 வரையான வகுப்புக்களில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே கற்பதாகவும் அறிய முடிகின்றது. இவ்வெல்லாச் சந்தர்ப்பங்களிலும் கல்வியின் தரம் குறைவானதாகவும் செலவு கூடியதாகவும் அமைந் திருக்கின்றது. ஆகையால் பாடசாலைகளை வகைப்படுத்தல் விவேகமான முறையில் நடைபெறல் வேண்டும். அவ்வாறாயின் எல்லா மாணவருக்கும் நியாயமான முறையில் பாடசாலைகளில் சேர்ந்து கொள்ள வாய்ப்புக் கிட்டும். மேலும் பாடசாலைகள் தாங்கக்கூடிய பொருளாதாரத்தை உடையவையாகவும் இருக்கும். அதே சமயம் மாணவர்களின் எண்ணிக்கை 3000 இலும் கூடிய 77 பாடசாலைகள் உள்ளன. அப்பாடசாலைகள் முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. எல்லா மாணவர்கள் தொடர்பாகவும் தனித்தனி யாகக் கவனம் செலுத்த முடியாமை மாணவர்களின் உளவளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிலையாகும். மேலும் இவற்றுள் சில பாடசாலைகள் வசதி படைத்தோருக்கானவையாகவும் சுதந்திரத்திற்கு முன்னுள்ள நிலையை பிரதிபலிப்பவையாகவும் உள்ளன. இவ்வாறான சில பாடசாலைகள் ஐந்தாம் தரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் அனுப்பப்படும் மாணவர்களைக் கூட சேர்த்துக் கொள்வதில்லை என்றும் அவற்றின் வெற்றிடங்கள் சட்டத்திற்கு மாறான முறையில் நிரப்பப்படுவ தாகவும் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விஞ்ஞானம் கற்பிப்பதற்கு வசதியுள்ள பாடசாலைகளின் பரம்பல் சீரான முறையில் இல்லாமை அடுத்த பிரச்சினையாகும். உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையுடைய 1AB பாடசாலைகள் ஒன்றாவது இல்லாத 73 கோட்டங்கள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. அதன் பயனாக கல்லூரி மட்ட மாணவர்களில் 50 % கலைப் பிரிவுகளில் கற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். 1000 பாடசாலைகளை நிறுவும் திட்டத்துடன் இக் குறைபாடு நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழினுட்பப் பாடத்துறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையானது மற்றுமொரு பாராட்டத்தக்க நடவடிக்கையாகும்.

கல்வியின் தர மேம்பாட்டுக்காக கலைத்திட்ட வடிவமைப்பாளர்களினால் பின்பற்றப்படும் தந்திரோபாயமாக கலைத்திட்டச் சீர்திருத்தத்தைக் குறிப்பிடலாம். தேசிய கலைத்திட்டக் கொள்கைகளுக்கேற்ப ஒவ்வொரு 8 ஆண்டுகளுக்கு ஒரு முறை கலைத்திட்டத்தை சீர்திருத்தம் செய்தல் வேண்டும். எனினும் கடந்த காலங்களில் நடைபெற்ற கலைத்திட்ட சீர்திருத்தங்களின்போது ஒரு பாடத்திற்கு மாற்றமாக மற்றொரு பாடத்தை அறிமுகப்படுத்துவதும் பாட உள்ளடக்கத்தில் சில தலைப்புக்களைச் சேர்க்கின்றதுமான ஒட்டுப்போடும் வேலை மாத்திரமே நடைபெற்றுள்ளது. எனினும் இங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவது முறையியலில் செய்யப்படும் மாற்றமாகும். கற்றல் பிள்ளை மையமானதாகவும், செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும் என கல்வி தத்துவவியலாளர்கள் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக வாதிட்டு வருகின்றனர். மேலும் அறிமுகப்படுத்தபட வேண்டிய ஒரு புதிய விடயமாகக் குறிப்பிடுவது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பமாகும். ஆரம்ப பருவம் தவிர்ந்த ஏனைய பருவங்களில் எமது வகுப்பறைகளில் தரப்படுகின்ற போதனைகள் ஒரே மாதிரியானவையாகும். வகுப்பறைகள் அறிவைப் பரப்பும் தொழிற்சாலைகளாக மாத்திரமே செயற்படுகின்றன. சமகால சமுதாயத்தின் வெற்றிக்கு அவசியமான ஆள்பரிவு, தலைமைத்துவம், ஆளிடைத் திறன்கள், தாமாக ஆரம்பிக்கும் திறன், ஆக்கத்திறன், பிரச்சினை தீர்த்தல், தொடர்பாடல் போன்ற மென்திறன்களை மாணவர்கள் மிக அரிதாகவே தம்மிடத்தே வளர்த்துக் கொள்கின்றனர்.

மேற்படி கலாசாரம் நிலைத்திருப்பதற்கான ஒரு முக்கிய காரணியாக தற்போது நடைமுறையிலுள்ள மதிப்பீட்டு முறையைக் குறிப்பிடலாம். பாடசாலை மட்ட கணிப்பீடு நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் மேலாக மதிக்கப்படுவது பொதுப்பரீட்சைகளில் பெறும் தரங்களாகும். முக்கிய விடயம் யாதெனில் ஒவ்வொரு பிள்ளையினதும் இலக்கு பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்வதாக இருப்பதால் பாடசாலை முறைமைக்குச் சமாந்தரமாக தனியார் “படிப்பித்தல்” தொழில்துறையொன்று நடைமுறையிலுள்ளது. இந்த சவால்களை வென்றெடுக்க பரீட்சை முறையில் மாற்றமொன்று அவசியமாகின்றது. இதற்காக

பாடசாலை மட்டக் கணிப்பீடு வலுவூட்டப்பட வேண்டும். பொதுப்பரீட்சை களில் அறிவை கணிப்பிடும் வினாக்களுக்கு பதிலாக பிரயோகத்தை அடிப்படையாகக் கொண்ட வினாக்களை கொண்டதாக வினாத்தாள்கள் தயாரிக்கப்பட வேண்டும். மேலும் சில கட்டமைப்பு மாற்றங்களும் அவசியமாகின்றன. க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையின் முக்கியத்துவம் குறைக்கப்பட வேண்டும். இன்றைய நிலையில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சையின் கல்விசார் முக்கியத்துவம் மிகக் குறைவானதாகும். இன்று தொழில் வழங்குனர்கள் தொழில் வழங்க க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை சான்றிதழையே கோருகின்றனர். கீழ் மட்ட தொழில்களுக்கு NVQ பரீட்சை போதுமானது. க.பொ.த (சா.தர)ப் பரீட்சை பாடசாலை மட்டப்பரீட்சையாகவோ அல்லது 1981 ஆம் ஆண்டின் வெள்ளை யறிக்கையின்படி பரீட்சைத் திணைக்களமும் மாகாணமும் இணைந்து நடாத்தும் பரீட்சையாகவோ இருக்க முடியும். அவ்வாறாயின் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை கல்லூரிக் காலத்தின் முடிவில் அமையும் ஒரு அடைவுப் பரீட்சையாக அமைய வேண்டுமேயன்றி அது ஒரு பல்கலைக்கழக பிரவேசத்திற்கான நுழைவுப் பரீட்சையாக அமையக் கூடாது. தற்போதைய பாடசாலைக் காலமான 13 வருடகாலத்தை 12 வருடங்களாக குறைத்த பின்னர் அதன் இறுதியில் நடைபெறும். க.பொ.த (உ.தர)ப் பரீட்சையில் குறித்த ஒரு அடைவு மட்டத்தை அடையும் மாணவர்களைப் பல்கலைக்கழகப் பாடநெறியைப் பயிலத் தயார்ப்படுத்துமுகமாக பல்கலைக்கழத்தின் அத்திவாரப் பாடநெறியைப் பயில தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உளச்சார்பு பரீட்சையொன்றின் அடிப்படையிலேயே மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக் கப்படுவார்கள்.

கல்வியின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாகக் கருதும்போது ஆசிரியர் ஒரு தீர்க்கமான வகிபாகத்தை வகிக்கின்றார். ஆகவே ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல், பயிற்றுவித்தல், நல்ல முறையில் பயன்படுத்தல் ஆகியன மிகவும் முக்கியமான பணிகளாகும். பட்டதாரிகளை ஆசிரிய பதவிக்கு நியமித்தல் தேவையின் அடிப்படையிலோ தகைமையின் அடிப்படையிலோ அல்லாது பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் அடிப்படையிலேயே நடைபெறுகின்றது. அவர்களுக்கு

மற்றொரு தொழிலைப் பெறும் வாய்ப்பின்மையால் ஆசிரியத் தொழிலில் இணைந்து கொள்கின்றார்கள். இதனால் நியமிக்கப்படும் பெரும்பாலா னோர் ஆசிரியத் தொழிலுக்கு தகைமையுடையவர்கள் அல்லர். அவர்கள் பாடசாலையில் உள்ள வெற்றிடங்களின் அடிப்படையிலோ, பாடங்களின் அடிப்படையிலோ நியமிக்கப்படுபடுபவர்கள் அல்லர். மொத்த ஆசிரியர் மாணவர் விகிதம் 1:17 ஆக இருந்த போதிலும் பெரும்பாலான பின்தங்கிய பிரதேசங்களில் பெரும்பாலான ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஆசிரிய பயிற்சி நிறுவனங்கள் பல உள்ள போதிலும் அவற்றால் வழங்கப்படும் பயிற்சியின் தரம் பற்றி திருப்தியடைய முடியாதுள்ளது. அருவித் தொடர் மாதிரியிலான சேவைக்கால பயிற்சி நடைமுறைப் படுத்தப்பட்ட போதிலும், ஆசிரியர்களின் மனப்பாங்குகளில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. புதிதாக அறிமுகப்படுத்திய எண்ணக் கருவான பாடசாலை அடிப்படையிலான ஆசிரிய அபிவிருத்தி வலுவூட்டப் பட வேண்டிய தொன்றாகும். ஆசிரியர் ஒழுக்கம் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ள அதேவேளை தினமும் மொத்த ஆசிரியர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பகுதியினர் கடமைக்கு வருகை தருவதில்லை.

ஆசிரியத் தொழிலை அங்கீகரிக்கப்பட்ட ஒரு வாண்மைத்தொழிலாக மாற்றுவது ஒரு கட்டாயத் தேவையாகும். அதற்காக சரியான பயிற்சி, சம்பளம் மற்றும் சேவையின் தொழில்வாண்மை ஆகியன கட்டாயமான தாகும். ஊக்கமுள்ள ஆசிரிய பயிலுனர்களுக்கு கல்விமாணி போன்ற பட்டங்களைப் பின்பற்ற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். தற்போதைய தேசிய கல்விக் கல்லூரிகள் பட்டமளிக்கும் நிறுவனமாக பதவி உயர்த்தப்பட வேண்டும். ஏனைய பயிற்சி நிறுவனங்கள் சேவைக்கால ஆசிரிய பயிற்சி நிலையங்களாக அல்லது ஆசிரிய மத்திய நிலையங் களாக மாற்றப்பட வேண்டும். தற்போதுள்ள பயிற்றப்படாத பட்டதாரிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக பல்கலைக்கழகங்கள் கல்விமாணி பட்டதாரிகளை உருவாக்குதல் வேண்டும். சம்பளம் பற்றிக் கருதும் போது அரச சேவையில் உள்ள மிகவும் குறைவாக சம்பளம் பெறும் குழுவினர் ஆசிரியர்களாவர். அதிகரிக்கப்பட்ட சம்பளத்துடனும் கண்காணிப்புடனும் அவர்கள் கௌரவமான ஒரு தொழில் செய்பவர் களாக மதிக்கப்பட வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு தொழில்

வாண்மையானது ஒரு தொழில் வாண்மைச் சபையினால் மேம்படுத்த முடியும். அமைச்சு, திணைக்களம், வலயம், கோட்டம் போன்ற பல்வேறு மட்டங்களில் உள்ள பதவிநிலைக் கட்டமைப்புக்களில் பல்வேறு சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனினும் பாடசாலைகள் எனப்படும் ''கல்விப்பரிமாற்றம்'' நடைபெறுகின்ற இடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மிகச்சிலவாகும். பாராளுமன்றத்தில் பாடசாலை அபிவிருத்தி சபையைத் தாபிக்கும் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டது. எனினும் அது ஓர் அலட்சியத்திற்குள்ளான ஆவணமாகும். பாடசாலை மட்ட முகாமைத்துவம் தொடர்பான அபிவிருத்தி படிப்படியாக அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றது. அவை அவற்றின் வெற்றிகரமான முடிவை நோக்கிச் செல்ல வேண்டும். விழிப்பூட்டும் ஆக்கங்களின் மூலம் ஒரு சரியான பின்னணி உருவாக்கப்பட வேண்டும்.

## கல்வி சார் சீர்திருத்தங்களின் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள்

கடந்த காலங்களில் பதவியிலிருந்த எல்லா அரசாங்கங்களும் கல்விச் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தி வந்தது. கல்வி சார்பான வசதிகளை வழங்குவதில் அவர்கள் குறிப்பிட்டளவு வெற்றியடைந்துள்ளனர். தீவின் சகல மூலைமுடுக்குகளையும் உள்ளடக்கும் வகையில் பாடசாலை வலையமைப்பு தீவு பூராவும் பரந்து காணப்படுகின்றது. வளர்ச்சியடைந்த அல்லது வளர்ச்சியடைகின்ற ஏனைய எந்த ஒரு நாட்டுடன் ஒப்பிடும் போதும் இலங்கையில் மிகவும் சிறப்பான ஆசிரியர் மாணவர் விகிதம் காணப்படுகின்றது. எனினும் சமகால பூகோளமய தொழினுட்ப உலகில் வெற்றிகரமாக வாழத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் மேற்படி பாடசாலைத் தொகுதி வழங்குகின்றதா என்பது ஒரு கேள்விக்குறியாகும். இங்கு தான் தரம் தொடர்பான பரிமாணம் மிகவும் பொருந்தும்.

கல்வி திட்டமிடல், முகாமைத்துவம் மற்றும் ஒப்பீட்டளவிலான கல்வி ஆகியன தொடர்பில் நீண்டகால அனுபவமுடைய கல்வியாளரான OECD யின் கல்வியாளர் Torsten Husen, பாரிஸ் நகரில் யுனெஸ்கோவில்

HEB யின் ஆரம்ப கால தலைவராக 17 ஆண்டுகள் தொடர்ந்து செயற்பட்டார். அவர் IEA யின் தலைவராகவும் செயற்பட்டார். “Education and Global Concern” என்ற அவரது வெளியீட்டில் (1990) கல்வி சீர்திருத்தம் தொடர்பாக சில விதிமுறைகளையும் வரையறைகளையும் அவர் வெளியிட்டுள்ளார். அவை பற்றி ஆராய்ந்து பார்த்து இலங்கை அதிலிருந்து எத்தகைய பயன்களைப் பெற முடியும் என்றறியலாம்.

ஆரம்பத்திலேயே அவர் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொண்ட மாதிரி உரு ஒன்று இல்லை என அவர் குறிப்பிடுகின்றார். அவரது கூற்றின்படி வரலாறு ரீதியானதும், கலாசார ரீதியானதும், பொருளாதார ரீதியானதுமான நிலைமைகள் நாட்டினுள்ளும் நாடுகளுக்கிடையேயும் வேறுபடுகின்றமையால் ஒவ்வொரு விடயத்தையும் தனித்துவமான விடயங்களாகக் கருதுதல் வேண்டும். எனினும் சீர்திருத்தங்களை செயற்படுத்தக்கூடிய பொதுவான விதிமுறைகள் இருப்பதாகவும் அவற்றின் அடிப்படையில் சீர்திருத்தங்களை செய்ய முடியுமெனவும் எடுத்துக் காட்டுகின்றார். அவ்வாறு ரோஸ்ரன் ஹுசன் எடுத்துக்காட்டிய கோட்பாடுகள் சில இதன்கீழ் தரப்படுகின்றன.

**I. கல்வி சீர்திருத்தங்கள் சமூக சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாகும்-** சமூக, பொருளாதார மாற்றங்கள் என்ற பெரிய சட்டகத்தினுள் கல்வியானது திட்டமிடப்பட்டு செயற்படுத்தபட வேண்டும். சமூக பொருளாதார மாற்றங்களுக்கு பிரதியீடாக கல்விச் சீர்திருத்தங்களைக் கருத முடியாது.

**II. சீர்திருத்தங்களை திடுதிப்பென ஒரே இரவில் செயற்படுத்த முடியாது-** “கல்வி நிறுவனங்கள் முக்கியமாக பாடசாலைகள் வலிமையானதும் நிறுவனம் சார்ந்த விறைப்பானதும் விட்டுக் கொடுக்கும் தன்மையற்றது மாகும். கல்விப் பழக்கவழக்கங்கள் மற்றும் கட்டமைப்பானது நீண்டகால பாரம்பரியத்தை உடையவை. அவ்வாறு வடிவமைக்கப்பட நீண்டகாலம் எடுத்தவையாகும்” உண்மை யாதெனில் ஒரு சட்டத்தை பாராளு மன்றத்தில் பிரகடனப்படுத்திய மாத்திரத்தில் அது தொகுதியை

அடையவதில்லை. நூலாசிரியர் இதற்கான உதாரணத்தை சுவீடனில் இருந்து தருகின்றார். அதாவது 1940 இல் செயற்பட்ட இரண்டு குழுக்கள் பிரேரணைகளை உருவாக்க 10 ஆண்டுகள் எடுத்தன. நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னோடி நடவடிக்கைகளுக்காக மேலும் 10 ஆண்டுகள் செலவாகின. அவற்றைச் செயற்படுத்த மற்றொரு பத்தாண்டுகள் எடுத்தன. இதன்படி மேற்படி சீர்திருத்தத்திற்காக மொத்தமாக 30 ஆண்டுகள் எடுத்தன. இதன் பெறுபேறுகள் பயன்மிக்கவையாக அமைந்தன.

தோல்வியடைந்த மற்றொரு உதாரணத்தை அதே நாட்டிலிருந்து நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். 1968 ஆம் ஆண்டு ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. 1973 இல் அது அதன் அறிக்கையை வெளியிட்டது. 1975இல் சீர்திருத்த பிரேரணைகள் தீர்மானிக்கப்பட்டன. அவை 1977 இல் அமுல் படுத்தப்பட்டன. மேற்படி மொத்த வட்டத்திற்கும் 10 ஆண்டுகள் எடுத்ததாயினும் அது தோல்வியில் முடிவடைந்தது. இதன்படி கல்வி சார் சீர்திருத்தங்கள் படிமுறையானதாக அமைய வேண்டும் என்பது நன்கு தெளிவாகின்றது.

**111 அவசியமாகும் வளங்கள்** - நிதி மட்டும் மனித வளங்களே இங்கு வளங்கள் எனக் கருதப்படுகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளின் பொற்காலமான 60 களும் ஆரம்பகால 80 களும் கல்விக்கான செலவு வேகமாக வளர்ச்சியடைந்த காலமாகும். இது மொத்த தேசிய உற்பத்தியான GNP யிலும் இரண்டு மடங்காக இருந்த காலமாகும். கல்வியின் மீதான முதலீடு பலகாலத்தின் பின்னர் பயன் தரும் ஒரு முதலீடாகும். அதாவது முதலீட்டின் பயனை அடைய முடிவது பல தசாப்தங்களின் பின்னராகும். இங்கு உட்கட்டமைப்பு வசதிகள், பொருட்கள், திரவியங்கள், மற்றும் கூலி கொடுத்தல், மனிதவளப் பயிற்சித் தேவைகள் போன்றவற்றிற்கும் முதலீடு அவசியமாகின்ற தாயினும் அவற்றின் பலன்களை நாடு பிற்காலத்திலேயே அடையும்.

**iv மத்திய அரசாங்கமும் அடிமட்டத்திலுள்ளவர்களின் பங்களிப்பும் மிகப் பிரதான காரணிகளாகும்** - பொதுவாக கல்விக்கான சீர்திருத்தங்கள் மத்திய அரசு மட்டத்திலேயே ஆரம்பிக்கப்படுகின்றன. மத்திய அரசு தேவையான முதலீடுகளான நிதி சார்பான முதலீடுகளை வழங்குகிறது. அத்தகைய தலையீடானது கல்வி முறைமையின் பொதுச் சட்டகத்தின் கட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தும். சகல பயனாளிகளினதும் கலந்துரையாடலுடன் இதனைச் செய்தல் அவசியமாகும். பரந்த கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பங்கு பற்றுபவர்களைத் தூண்டுதலும், அர்பணிக்கச் செய்தலும் அவசியமாகின்றது. சீர்திருத்தங்களை அமுல்படுத்தும் துறையிலுள்ள வர்களின் பூரண ஒத்துழைப்பின் பேரில் அதிக பயன்களைப் பெற முடியுமென ஆய்வுகளிலிருந்து அறிய முடிகின்றது.

**கல்வி சார்பான ஆய்வுகளும், அபிவிருத்தியும்:** வெவ்வேறு பருவங்கள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் கல்வி சார்பான சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தை அடைய முடியும். வெளியீடுகளை மதிப்பிடுவதன் மூலமும், அமுல்படுத்துவதன் மூலமும், திட்டமிடுதலின் மூலமும் இதனை அடைய முடியும். கண்காணிப்பதற்கும் திட்டத்தை தக்கவாறு திருத்துவதற்கும், மத்தியில் ஒரு தகவல் மையம் இருத்தல் அவசியமாகின்றது. எதிர்பார்த்த இலக்குகள் அடையப்பட்டுள்ளனவா என்றறிய விசேட ஆய்வுகள் அவசியமாகின்றன. வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளுக்கு நிதி சார்பான தகவல்கள் முக்கியமாகின்றன. சரியான முடிவுகளை எடுப்பதற்காக பிராந்திய மட்டத்திற்கும், உள்நாட்டு மட்டத்திற்கும் மேற்படி தகவல்கள் அவசியமாகின்றன.

இலங்கையின் வரலாற்றை ஆராயும்போது சீர்திருத்தம் என்பது எப்போதும் கட்சி அரசியல் என்பது தெள்ளத் தெளிவாகும் விடயமாகும். எந்தக் கட்டத்திலும் எமக்குப் பரந்த தேசிய நோக்கு இருக்க வில்லை. அதிகாரத்திலிருந்தவர்களின் ஆசைகளையும் கற்பனைகளையும் நிறைவேற்றுவதற்காகவே சீர்திருத்தங்கள் அமுல் செய்யப்பட்டன. முன்னாள் அமைச்சின் செயலாளர் ஒருவரான திரு எம்.டி.டி. பெரேரா இது தொடர்பான நிகழ்வொன்றை “In the Pursuit of Governance” (2002)

என்ற கட்டுரையில் இலவச சீருடை வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தல் எவ்வாறு பொலனறுவையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அதன் நிதி தொடர்பான பாதிப்பை பற்றியும் ஆராயாது ஆரம்பமாயிற்று என பின்வருமாறு ஞாபகப்படுத்துகின்றார். முக்கிய விடயம் யாதெனில் NEC செயற்படும் போது தான் இவ்வாறு நடைபெற்றது. அதே அரசாங்கத்தின் அமைச்சர் மாறும் கட்டத்தில் கல்விக்கொள்கைகள் மாற்றமடைந்தமைக்கான சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்கள் பல உள்ளன. அதனாற்றான் இளைஞர் ஆணைக்குழு, தனியான தேசிய கல்வி ஆணைக்குழுவொன்றை தாபிப்பது பற்றி பரிந்துரைத்தது. அவ்வாறு தேசிய கல்வி ஆணைக்குழு நியமிக்கப்பட்டதன் பின்னரும் கல்விக் கொள்கைகள் கட்சி அரசியலை பிரதிபலித்த சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டலாம். எவ்வாறாயினும் எதிர்க்கட்சியானது எப்போதும் கல்விக் கொள்கைகளை எதிர்த்தே வந்தன.

சீர்திருத்தங்களை விரைவாக உருவாக்கி அமுல்படுத்தி அதன் பெறுபேறுகளை அடுத்த தேர்தலுக்கு முன்பதாக காட்ட முனைதல் மற்றுமொரு பின்னடைவாகும். போதியளவு முன்னாயத்தமின்றி சீர்திருத்தங்களை அமுல்படுத்தல் அவற்றின் தோல்விக்கே காரண மாகும். உதாரணமாக வரலாறு, புவியியல், குடியியல் ஆகிய பாடங் களை ஒன்றிணைத்து சமூகக்கல்வி என்ற பாடத்தை அமுல்படுத்திய சந்தர்ப்பத்தைக் குறிப்பிடலாம். அச்சமயத்தில் மேற்படி மூன்று பாடத்திலும் பரிச்சயமுள்ள ஒரு சில ஆசிரியர்களே இருந்தனர். அதனால் ''வரலாறு'' பாடத்தில் திறமையுள்ள ஒரு ஆசிரியர் புவியியல் பாடத்தை கைவிட்டு ''வரலாறு'' பாடப்பகுதிகளை மாத்திரம் கற்பித்த சந்தர்ப்பங்கள் பல காணப்பட்டன. தக்க சன்மானமின்றி புதிய ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள எந்த ஒரு ஆசிரியரும் முன்வரமாட்டார்.

இவ்வாறான மற்றொரு சந்தர்ப்பத்தை உயர்தரத்தில் தாவரவியல், விலங்கியல் பாடங்களுக்கு பதிலாக உயிரியல் பாடத்தைக் கற்பிக்க திடமிட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடலாம். ஆசிரியர்கள் இரண்டு பாடங்களையும் கற்பிக்கும் ஆற்றல் அற்றவர்களாக விருந்தனர். திட்டமொன்றை அமுல்படுத்து முன்னர் ஆசிரியர்கள் சரியாகத்

தயார்படுத்தப்படவில்லையாயின் பெறுபேறுகள் குறைவானதாகவே அமையும். கல்விசார் மாற்றங்கள் தொடர்பாக பெற்றோர்கள் மிகுந்த விழிப்புடனேயே செயற்படுவர். ஆகவே கட்டாயமாக தேவையானபோது மாத்திரமே மாற்றங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். விழிப்பை ஏற்படுத்தல், ஒருமித்த கருத்தைக் கொண்டிருத்தல் ஆகியன முக்கிய மாகும். அவ்வாறில்லையாயின் கல்விச் சீர்திருத்தங்கள் அதிகாரத்தி லுள்ளவர்களின் கற்பனைகளை செயற்படுத்துவதற்காகப் பிள்ளைகளை ஆய்வு கூட எலிகளாக்கும் நடைமுறையாகவே அமையும்.

இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய மற்றைய விடயம் வள ஒதுக்கீடாகும். 1960 ஆம் ஆண்டில் கல்விக்கான ஒதுக்கீடு GDP யில் 5 வீதமாகவும் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் 15 வீதமாகவும் இருந்தது. எனினும் 1977 இன் பின்னர் அது GDPயின் 2 வீதமாகவும் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் 8 வீதமாகவும் குறைந்திருந்தது. இன்று அது GDPயின் 1.86 வீதமாகவும் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் 7 வீதமாகவும் அமைந்துள்ளது. எனினும் அரசாங்கத்தின் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு அதிகரித்துள்ளதாகவும் GDPயின் பங்கான அரசாங்கத்தின் வருமானம் குறைந்துள்ள தெனவும், அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு அதிகரித்துள்ளதெனவும் காரணங்கள் பல முன்வைக்கப் படுகின்றன. நிதி ஒதுக்கீடு குறைந்துள்ளமைக்கு மேலதிகமாக, காசுப்பாய்ச்சல் கட்டுப் படுத்தப்பட்டுள்ளதனாலும் கல்விக்கான செலவுகள் குறைந்துள்ளன. கவலைக்கிடமான விடயம் யாதெனில் மேற்படி குறைந்த அளவான ஒதுக்கீடும் கூட முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக தேவைக்கதிகமாக ஆசிரியர்களை நியமித்தல் ஒரு பாரதூரமான பிரச்சினையாகும். நடாத்த முடியாத பாடசாலைகளைப் பராமரித்தல் மற்றொரு வீண்விரயமாகும். கல்விக்காக போதியளவான ஒதுக்கீடுகளை வழங்க முடியாதிருப்பின் சிறந்த முறையாக தனியார் - பொதுத் துறையினரின் பங்களிப்பை ஊக்குவிப்பதே செய்ய வேண்டிய மாற்று வழியாகும். ரியூசன் எனப்படும் தனியார் படிப்பித்தல் துறையின் அபரிமித வளர்ச்சி இதனையே எடுத்துக் காட்டுகின்றது.

கல்வி முறைமையின் வினைத்திறனுக்கும் விளைதிறனுக்கும் எதிராக சில மீளாய்வாளர்கள் கருத்தறிவித்துள்ள மற்றொரு எதிர்நிலையாக அரசியல்மயமாக்கலைக் குறிப்பிடலாம். நீண்டகால நிருவாக அனுபவமுடைய கல்வியாலளரும் வாண்மையாளருமான கலாநிதி ஆனந்த குருகே 5ஆவது சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர நினைவு தினத்தில் ஆற்றிய அவரது பேருரையின் போது பின்வருமாறு கூறுகின்றார். “ மற்றெல்லா விடயங்களை விடவும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்ட உணர்ச்சிமிக்க விடயம் கல்வியாகும். அண்மைக் காலங்களில் வெள்ளையறிக்கை தொடர்பாக நடாத்தப்பட்ட மூன்று விவாதங்களின் போதும், கல்வி தொடர்பான விரிவான மசோதா அறிமுகஞ் செய்யாது கைவிடப்பட்டது. அரசியல் சூதாட்டத்திற்கு நாம் கல்வியை அர்ப்பணித்துள்ள இவ்விடயம் எமது தேசியத்தின் துயரம் தரும் கதையாகும்.” (P 134) NEC “Envisioning Education for Human Development” (2003)எனும் அதன் வெளியீட்டில் “இந்நிலையை சீர்படுத்த உயர் மட்ட அரசியல் விருப்பு அவசியமாகின்றது. கல்வி முறைமையிலிருந்து அரசியலை வேறாக்காதிருக்கும் காலமெல்லாம் கல்வி முறைமை முழுமையாக வீழ்ச்சியடைவதை எந்த ஒரு கட்டமைப்பு அல்லது ஒழுங்கமைப்பு மாற்றத்தினாலோ, கொள்கைச் சீரமைப்பினாலோ தடுக்க முடியாது. ஆகவே எல்லா அரசியல் கட்சிகளினதும் தலைவர்கள் ஒன்று சேர்ந்து கல்வி முறைமையிலிருந்து அரசியலை ஒழிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த இலக்கை அடைவதற்காக இது தொடர்பான கூட்டுப்பிரகடன மொன்றினைச் செய்து செயற்பாட்டுத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துதல் வேண்டும் (p 243). கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒருவரான திரு எரிக் ஜே.டி. சில்வா, பின்வருமாறு குறிப்பிடுகின்றார் “கட்டமைப்பு மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான குறைபாடுகள் பிரச்சினையின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். ஒட்டு மொத்த தொகுதியினது ஒழுக்கமைப்பிலும் வினைத்திறனிலும் பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாக அமைந்திருப்பது பொதுவாக இவ்வாறான அறிக்கைகளில் அரிதாகவே குறிப்பிடப்படுகின்ற போதிலும் நன்கு அறியப்பட்ட காரணியான, தொகுதியை முழுமையாகத் தனது தீவிரக்

கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற அரசியல்மயமாக்கல்” NEC 2004 - கற்றல் தொகுதி இல 24 - கல்வி முகாமைத்துவம்)

தேசிய கல்வி ஆணைக்குழுவை தாபித்த சமயத்தில் நிலவிய இரண்டு கட்சிகளினதும் ஒருமித்த நிலையானது தொடர்ந்து இல்லாமற் போனது ஒரு துரதிஷ்டவசமான நிலையாகும். தற்போது நாம் ஒரு விட்டுக் கொடுக்காத நிலையை அடைந்துள்ளோம். எனினும் தூரவானில் ஒரு வெள்ளிக் கீற்று தோற்றத்தான் செய்கின்றது. கல்விக்கான பாராளுமன்ற ஆலோசனைக் குழுவானது எல்லாக் கட்சிகளினதும் பங்களிப்புடன் கல்விசார் சீர்திருத்த ஆலோசனைகளை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது. ஒரு கட்சியின் அங்கத்தவர் களைத் தவிர ஏனைய சகல கட்சிகளினது அங்கத்தவர்களும் இந்த ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர். எதிர்கால சந்ததிகளின் நன்மை கருதிச் செயற்படுவதாயின் கல்வி தொடர்பான சீர்திருத்தங்களையும் பிரேரணைகளையும் தேசிய கொள்கைகளையும் அமுல்படுத்தும் போது அது தொடர்பான ஒரு தேசிய மட்டக் கலந்துரையாடலின் பின்னர் பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் செயற்படல் இந்நாட்டின் வாண்மையாளர்களின் பொறுப்பாகும்.

**இதுவே கலாநிதி கன்னங்கரவின் கொள்கைகளினால் பயனடைந்தோர் ஏற்க வேண்டிய வகிபாகமாகும்.**

**அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்!**

## References


Centre for Research and Development. (2003). *Education and Culture: Three Speeches by Dr. C.W.W.Kannangara.* Maharagama: National Institute of Education

Centre for Research and Development. (2003). *Dogged Perseverance Coupled with Fearless Advocacy.* Maharagama: National Institute of Education

Eric J. de Silva. (2004). *Management of Education Sectoral Education Review, Study Series No. 23.* Sri Lanka: National Education Commission

Eric J. de Silva. (2013). *Politics of Education Reform and Other Essays.* Nugegoda: Sarasavi Publishers

Guruge, A. W. P. (1992). *Control of Education: Implications for Quality and Relevance Dr.C.W.W.Kannangara Memorial Lecture 5*. Maharagama: National Institute of Education

Jayasuriya, J. E. (1977). *Educational Policies and Progress During British Rule in Ceylon.1796-1948.* Colombo: Associated Educational Publishers.

Jayasuriya, J. E.(1969). *Education in Ceylon Before and After Independance1939-1969* Colombo: Associated Educational Publishers

Jayaweera, S. (1988). *Educational policies and Change from the Mid Twentieth Century to 1977 – Occasional Papers in Education*. Maharagama: National Institute of Education

Ministry of Education and Cultural Affairs. (1964). *Proposals for a National System of Education*. Colombo: Government Press

Ministry of Education and Cultural Affairs. (1969). *Education in Ceylon - A Centenary Volume*. Colombo: Government Press.

Ministry of Education. (1973). *Medium term Education Development Plan 1973*-1977. Ministry of Education. Mimiographed.

Ministry of Education. (1979). *Report of the Education Reforms Committee – Relevance in Education.* Colombo: Government Press

Ministry of Education. (1981). *Education Proposals for Reform– General, University and Tertiary.* Sri Lanka: State Printing Cooperation

Ministry of Education. (2006). *Education Sector Development Framework and Programme* Battaramulla: Ministry of Education, Sri Lanka

Ministry of Education. (2012). *The National Strategic Plan for the General Education Sector (ESDFP- 2012 to 2016).* Battaramulla: Ministry of Education, Sri Lanka

National Education Commission. (1992). *First Report of the National Education Commission – S.P V of 1992.* Sri Lanka: Department of Government Printing

National Education Commission. (1995). *An Action-oriented Strategy Towards a National Education Policy Mimiographed.*

National Education Commission. (2003). *Envisioning Education for Human Development – Proposals for a National Policy Framework on General Education in Sri Lanka*. Sri Lanka: National Education Commission

National Institute of Education. (2001). *Reforming Education Unfinished Task.* Maharagama: Centre for Research and Development, National Institute of Education

Peiris, M.D.D. (2002). *In the Pursuit of Governance.* Stamford Lake Publications

Sessional Paper XXIV (1943). Report of the Special Committee on Education. Government Press, Ceylon

Sessional Paper XXVI (1962). Final Report of the National Education Commission- 1961. Government Press Ceylon

Sessional Paper 1 (1990). Report of the Presidential Commission on Youth. Department of Government Printing

The World Bank (2005). Treasures of the Education System in Sri Lanka. South Asia Region : Human Development Unit

The World Bank (2011). Transforming School Education in Sri Lanka. South Asia Region : Human Development Unit

## Dr. C. W. W. Kannangara Memorial Lectures in the Series

01. Prof. J. E. Jayasooriya (1988). Democratization of Education: Contribution of Dr. C.W.W. Kannangara
02. Prof. Swarna Jayaweera (1989). Extension of Educational Opportunity – The Unfinished Task.
03. Prof. K.W. Gunawardena (1990). Dr. C.W.W. Kannagara's Vision of the Past- Education, Religion, Culture and Society under Colonial Rule
04. Deshabandu Bogoda Premaratne (1991). Free Education Redefined: Education in Defense of Freedom
05. Dr. Ananda W. P. Guruge (1992). Control of Education: Implications for Quality and Relevance
06. Prof. G.L. Peiris (1993). The Kannangara Reforms: A Foundation for National Development
07. Prof. Lakshman Jayathillake (1994). Education for Freedom – Issues of Development, Individual Goals and Social Priorities
08. Prof. W. Ariyadasa de Silva (1995). The Concept of National System of Education.
09. Prof. Chandra Gunawardena (1996). Education in Sri Lanka: A Tool for Empowerment or an Instrument of Society Mobility
10. Mr. D. A. perera (1997). The Freedom to Teach and the Freedom to Learn
11. Ms. Sivanandanie Duraiswamy (1998). Hindu Perspectives on Education and Dr. Kannangara's Educational Philosophy
12. Dr. Premadasa Udagama (2001). Colonialism, Globalization and Education
13. Prof. J. B. Dissanayake (2002). A Language at the Crossroads: The Case of Sinhala

14. Prof. A. V. D. De S. Indraratna (2003). Education and Development Role of C.W.W. Kannangara

15. Susil Siriwardana (2004). The Kannangara Legacy- As Source Text for Re-Constructing Sri Lanka Society and State

16. Mr. M. C. Pant (2005). Open Schooling Concept, Evolution Application (Indian Perspective)

17. Deshamanya H. L. de Silva (2006) Envisioning a Sri Lankan Identity in a Multicultural Society

18. Dr. A. G. Hussain Ismail (2007) Equal Opportunity in Education between Communities A Vision Of Kannangara. Some Reflections on the Education of the Muslim Community in Sri Lanka

19. Prof. Narada Warnasuriya (2008). The Kannangara Legacy in Today's Context: The Role of the State in Higher Education

20. Prof. Carlo Fonseka (2009). Reforming Education: Finishing the Unfinished Task

21. Prof. Gamini Samaranayake (2010). Problems and Challenges in University Education in Sri Lanka: An Overview

22. Prof. A.V. Suraweera (2011). Dr. Kannangara's Fee Education Proposals in relation to the subsequent expansion of the Tuition Industry

23. Dr. G. B. Gunawardene (2012). Kannangara vision: Challenge in Reforming Education

24. Prof. A. K. W. Jayawardane (2013). Towards Knowledge Hub and Citizen Attributes Aimed Education through Education Reforms

## திரு. ஆர். எஸ். மெதகம

### இப்பேருரையாளர் பற்றி...

1960 ஆம் ஆண்டில் பேராதெனியா பல்கலைக்கழகப் பட்டதாரியாக வெளியேறிய திரு. ஆர்.எஸ். மெதகம கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார். 1962-1963 ஆம் ஆண்டுகளில் அதே பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்பின் டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்த அவர் ஒரு பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து கல்வி நிருவக சேவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் வட்டார கல்வி அதிகாரியாக நியமனம் பெற்று படிப்படியாக முன்னேறி மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் தேசிய பாடசாலகள் பணிப்பாளர் வரை பதவியில் உயர்ந்தார்.

1976 ஆம் ஆண்டில் வித்தியோதயா பல்கலைக்கழகத்தில் சமூகப் புள்ளிவிவரவியல் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறியைப் பயின்ற அவர், 1978 - 79 ஆண்டுகளில் லாஸ் பானோசிலுள்ள பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் வாண்மைக் கல்விக்கான முதுமாணி பட்டத்தைப் பெற்றார். 1983 - 84 ஆண்டு காலத்தில் ஷெபீல்ட் பல்கலைக் கழகத்தில் கல்வி முகாமைத்துவம் தொடர்பான முதுமாணி பட்டத்தையும் பெற்றார்.

மாலைத்தீவிலுள்ள மாலே விஞ்ஞானக் கல்விக்கான மத்திய நிலையத்தில் அதிபராக பதவி ஏற்பதற்காக உரிய காலத்திற்கு முன்னரேயே அரச சேவையிலிருந்து இளைப்பாறிய திரு. மெதகம அவர்கள், அங்கு ஐந்தாண்டு காலம் சேவையாற்றிய பின்னர் இலங்கை திரும்பினார்.

அதன் பின்னர் 1995 ஆம் ஆண்டில் அவர் தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயலாளராக பதவி வகிக்க அழைக்கப்பட்டார். அப்பதவியில் 1999 வரை அவர் பணியாற்றிய இக்கால கட்டத்திலேயே 1997 - 98 ஆம் ஆண்டு கால கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. அவர் அச்செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றினார். மேற்படி அமுல்படுத்தலை மேற்பார்வை செய்த கல்விக்கான ஜனாதிபதி செயலணியின் அங்கத்தவராகவும் அவர் செயற்பட்டார். கல்வி அமைச்சின் கல்வித் சீர்திருத்தங்களுக்கான பணிப்பாளர் நாயகமாக 1999 இல் நியமிக்கப்பட்ட அவர் சீர்திருத்தங்களை அமுல்படுத்தலை விரைவுபடுத்தினார். அப்பதவியில் தொடர்ந்து பணியாற்றிய அவர் 2007 வரை கல்வி அமைச்சின் பிரதம ஆலோசகராகவும் பணியாற்றினார்.

உலக வங்கி, சார்க் அமைப்பு, யுனிசெப், IPE, யுனெஸ்கோ, ஆகிய தாபனங்களி னால் ஒழுங்கு செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையான சர்வதேச மட்ட கருத்தரங்கு களில் இலங்கைக் கல்வி அமைச்சின் பிரதிநிதியாக அவர் பங்குபற்றியுள்ளார்.

கல்வித் துறை சார்ந்த அவரது நீண்ட கால பணியின்போது திறந்த பல்கலைக் கழகத்தின் நிருவாக சபை, கொழும்பு பல்கலைக்கழக NEREC நிறுவனம், உயிர் இரசாயன நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழக மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழினுட்ப நிறுவனம், தொழில் பயிற்சி அதிகார சபை ஆகியவற்றின் அங்கத்தவராக அவர் பணியாற்றியுள்ளார்.

கல்வி அமைச்சிலிருந்து ஓய்வு பெற்ற அவர் உலக வங்கி, உலக சுகாதார தாபனம் ஆகியவற்றின் ஆலோசகராகவும் செயற்பட்டார். தற்போது தேசிய கல்வி நிறுவகக் கல்விசார் அலுவல்கள் சபை அங்கத்தவராகவும், கல்வி மேம்பாட்டுக்கான இலங்கை நிறுவனத்தின் தலைவராகவும் அவர் செயற்படுகின்றார்.